வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer — மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 17.02.2025 திங்கட்கிழமை | இதழ் : 48 | பக்கங்கள் : 12

# உள்ளூராட்சி சபை தேர்தலில் தமிழ் அரசு தனித்தே போட்டி

## தேவைப்படும் இடங்களில் கூட்டுக்கும் இணக்கம்

- கஜேந்திரகுமாரின் அழைப்புக்கு பதிலில்லை
- புதிய அரசமைப்பை விரைவுபடுத்த கோரிக்கை
- கட்சியின் ஒழுக்காற்று குழு மாற்றியமைப்பு

மட்டக்களப்பு, பெப்ரவரி 17

**எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி முன்னர் எடுத்த தீர்மானத்துக்கு அமைய தனித்தே போட்டியிடும். எனினும், தேவைப்படும் இடங்களில் ஏனைய கட்சிகளுடன் கூட்டமைத்து போட்டியிடுவது என்று அந்தக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடியில் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனின் இல்லத்தில் கூடியது. கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் கூடிய இந்தக் கூட்டத்தில் அந்தக் கட்சியின் மறைந்த தலைவர் 11

## இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொது செயலராக சுமந்திரன்



மட்டக்களப்பு, பெப். 17

இலங்கை தமிழ் அரசு கட்சியின் புதிய பொதுச் செயலாளராக எம். ஏ.சுமந்திரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு - களுவாஞ்சிக் குடியில் நடந்த கட்சியின் மத்திய குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில், பதில் பொதுச் செயலாளராக செயல்பட்டிருந்த ப. சத்தியலிங்கம் தனிப்பட்ட காரணங்களுக்காக தான் பதவி விலகுகிறார் என்று அறிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து எம். ஏ. சுமந்திரன் பதில் 11

## தீயில் எரிந்து பெண் மரணம்!

யாழ்ப்பாணம், பெப்.17

கடும் தீக் காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கர்ப்பவதி பெண் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார். சாவகச்சேரி பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலரான சதீஸ் தமிழினி (வயது 35) 11

## சீன அமைச்சர் தலைமையில் உயர் குழு யாழ். வருகின்றது!



கொழும்பு, பெப். 17

இலங்கைக்கு வருகை தரவுள்ள சீனாவின் நல்லிணக்கம் மற்றும் இன விவகாரங்களுக்கான அமைச்சர் பான் யூ தலைமையிலான உயர் குழு யாழ்ப்பாணத்துக்கும் வரவுள்ளது.

ஐந்து நாள் பயணமாக எதிர்வரும் புதன்கிழமை இலங்கை வரும் இந்தக் குழு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்டவர்களை சந்தித்துப் பேசவுள்ளது.

தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கும் கண்டி 11

## மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்!

வேலணையில் சோகம்!

யாழ்ப்பாணம், பெப்.17

தொலைக்காட்சி பார்ப்பதற்காக மின்னிணைப்பை ஏற்படுத்த முயன்ற 9 வயது சிறுவன் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வேலணை - செட்டிப்புலம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தைச் சேர்ந்த சந்திரஹாசன் கனிஷ்டன் என்பவரே உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

சிறுவனின் தாயார் அயலிலுள்ள உறவினரின் வீட்டுக்கு சென்றுள்ளார். இதனால், வீட்டில் தனித்திருந்த சிறுவன் தொலைக் காட்சி பார்ப்பதற்காக மின் 11

## தமிழர் தாயக அடையாளங்கள் அழிப்பை தடுத்து நிறுத்துங்கள்

### பிரித்தானிய தமிழர் பேரவை

லண்டன், பெப். 17

தமிழர் தாயகத்தின் அடையாளங்களை சிதைப்பது தடுக்கப்பட வேண்டும் என்று பிரித்தானிய தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

தமிழ் மக்களின் பூர்வீக தாயகத்தை முற்றாக விழுங்கி அதன் அடையாளதை சிங்கள - பௌத்த சின்னங்கள் மூலம் பிரதியீடு செய்ய வேண்டும் எனும் நோக்கத்துடன் 1948இலிருந்து அரசின் மூல வளங்கள், அதி காரங்கள், பொலிஸ் மற்றும் ஆயுதப் படைகள், சட்டங்கள் என்பனவற்றை பயன்படுத்தி சிறீ லங்கா தமிழர் தேசத்தினை சிதைத்து வருகின்றது.

வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியாக பிரிக்கும் முக்கிய நோக்கத்து டன் சிங்கள குடியேற்றம், பௌத்த விகாரைகள், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் நில ஒதுக்கீடுகள், 11

## அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கும் திட்டத்தில் மாற்றம்

### ஐ. எம். எவ்விடம் கோரியது அரசாங்கம்

கொழும்பு, பெப். 17

சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) ஒப்பந்தத்தின் பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துதல் என்ற விடயத்தை மாற்றியமைக்க அரசாங்கம் அந்த நிதியத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தனியார் மயப் படுத்தும் திட்டத்துக்கு பதிலாக 11

## ஆசிய அபிவிருத்தி வங்கியால் இலங்கைக்கு 90 கோடி டொலர்!

கொழும்பு, பெப். 17

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த ஆண்டு 90 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு முன் வந்துள்ளது.

இது தொடர்பான பேச்சுகள் தற்போது நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக, கடந்த 2024ஆம் ஆண்டில் இலங்கை பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருந்தபோது 8.8 கோடி டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கியிருந்தது.

தற்போது வழங்கப்படவுள்ள 90 கோடி 11

## அநுர அரசாங்கத்தின் கன்னி பட்ஜெட் இன்று

கொழும்பு, பெப். 17

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்தின் கன்னி வரவு - செலவுத் திட்டம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஒதுக்கீட்டு மசோதாவின் இரண்டாவது வாசிப்பு (வரவு -செலவு திட்ட உரை) இன்று நடைபெறும். இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் செவ்வாய்க் கிழமை முதல் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை ஏழு நாட்கள் நடைபெறும்.

இதைத் தொடர்ந்து, இரண்டாவது வாசிப்பு 11

## பிரதமரை சந்திக்க கேப்பாபிலவு மக்களுக்கு அனுமதி மறுப்பு!

முல்லைத்தீவு, பெப். 17

முல்லைத்தீவுக்கு நேற்றைய தினம் வருகை தந்த பிரதமர் ஹரிணி அமரசூரியவை சந்தித்துப் பேசுவதற்கு தமக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு படை முகாம் அமைந்துள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி போராட்டம் நடத்தி வரும் காணிகளின் உரிமையாளர்களே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

காணி விடுவிப்புக்காக போராடி வரும் தங்களை அமைச்சர் இ. சந்திரசேகரன் அறிவுறுத்தியதன் பேரில் பிரதமரை சந்திப்பதற்காக வருகை தந்த 11

## நாட்டில் சிறுநீரக நோய்களால் வருடத்துக்கு 10,000 பேர் மரணம்!

கொழும்பு, பெப். 17

நாட்டில் சிறுநீரக நோயால் வருடாந்தம் சுமார் 10 ஆயிரம் பேர் வரை உயிரிழக்கின்றனர் என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் தொடர்பான மருத்துவர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறுநீரக நோயாளர்கள் உள்ளனர். வறுமை மற்றும் மருத்துவ சிகிச்சை பெற முடியாமையால் சுமார் 10 ஆயிரம் பேர் வருடாந்தம் உயிரிழக்கின்றனர்.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, பதுளை, மொனராகலை, பொலநறுவை, அநுராதபுரம், குருநாகல் மாவட்டங்களிலேயே 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வோரையும் பாதுகாக்கவே நெல்லுக்கு உத்தரவாத விலை!

## ஏழாலையில் பிரதமர் ஹரிணி

யாழ்ப்பாணம், பெப். 17

**விவசாயிகளைப் போன்று நுகர்வோரையும் பாது காக்கும் வகையிலேயே அரசாங்கம் நெல்லுக்கு உத்தர வாத விலையை வழங்கியுள்ளது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த பிரத மர் ஹரிணி ஏழாலையில் மக் களை சந்தித்தபோதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கடந்த சில வரு டங்களில் இலங்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும் பொருளாதார நெருக் கடிக்கு முகங்கொடுக்க வேண் டியிருந்தது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. முன் னெப்போதும் இல்லாத வகை யில் கடுமையான பொருளா தார நெருக்கடியை சந்தித் தோம்.

கடந்த சில ஆண்டுகளில், இந்த முறைமையை மாற்ற மக்கள் தீவிரமாக பங்களித்த தைக் நாம் கண்டோம். நாட்டு மக்கள் வேறு நாடு, வேறு அரசி யல் கலாசாரம், வேறு தலைமை வேண்டும் என்று ஏற்கனவே யிருந்த முறைமையை மாற்ற முடிவு செய்தனர்.

2024 தேர்தலுடன், கடந்த சில வருடங்களாக மக்கள் இந்த நாட்டில் ஒரு மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாங்கள் புரிந்துகொள்கி றோம்.

இத்தகையதொரு பாராளு மன்றத்தை - இத்தகையதொரு தலைமையை மக்கள் ஏன் தெரிவு செய்தார்கள் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்.

மக்கள் முதலில் ஜனாதி பதியை தேர்ந்தெடுத்தனர். அவர் இங்குள்ள எங்களை போன்ற எளிய குடும்பத்தில், விவசாயக் குடும்பத்தில் இருந்து வந்தவர். அதுதான் முதல் மாற் றம்.

அதேபோன்று பொதுத் தேர்தலிலும் ஒரு பெரிய மாற் றத்தைக் கொண்டு வந்தனர். பாராளுமன்றத்துக்கு உங்களை உண்மையாக பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய ஒரு குழுவை நீங்கள் தேர்ந்தெடுத்துள்ளீர்கள். எனவே, பாராளுமன்றத்தில் இருப்பவர்கள் அரசியல் குடும் பங்களை சேர்ந்தவர்கள் அல்லர் என்பது உங்களுக்குத் தெரியும்.

நாட்டின் பிரஜை என்ற வகையில், ஒவ்வொரு பிரஜைக் கும் ஒரே சட்டம் சம உரிமை கள் இருக்க வேண்டும். நாம் அனைவரும் சமமானவர்கள். ஒரு நாடாக நாம் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். சமத்துவம் என்றால் நீங்கள் அனைவரும் ஒரே மாதிரியானவர்கள் என்று அர்த்தமல்ல. ஒரு பிரஜையாக உங்களுக்கு சம உரிமை இருக்க வேண்டும் - என்றார். (ஐ)



# வாழும்போதே வாழ்த்துவோம் யாழில் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப்.17

மக்களின் எழுச்சிக்காக சமூக மட்டத்தில் சேவையாற் றும் மனித நேய செயல்பாட் டாளர்களை "வாழும்போதே வாழ்த்துவோம் - பசுமையை நேசிப்போம்" என்னும் தொனிப் பொருளில் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மனித உரிமைகள் செயல் பாட்டு நிலையத்தின் ஏற்பாட் டில் யாழ்.பல்கலைக்கழ கைலாச பதி கலையரங்கில் நேற்று முன் தினம் இந்த கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, ஊடகவியலா ளர்கள், கல்வியியலாளர்கள், சமூக செயல்பாட்டாளர்கள் எனப் பலரும் கௌரவிக்கப்பட் டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர், வாழ் நாள் பேராசிரியர் பொ. பால சுந்தரம்பிள்ளை கலந்து சிறப் பித்தார். (எ-02)

# விஜய குமாரணதுங்கவின் நினைவுதினம் அனுஷ்டிப்பு



கொழும்பு, பெப். 17

பிரபல நடிகரும் அரசியல் தலைவரும் முன்னாள் ஜனா திபதி சந்திரிகாவின் கணவ ருமான விஜய குமாரணதுங்க வின் 37ஆவது நினைவுதினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

சீதுவையில் உள்ள விஜய குமாரணதுங்க சதுக்கத்தில் நடந்த இந்த நிகழ்வில் முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பங் கேற்றார்.

முன்னாள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க, ரஞ்சன் ராம நாயக்க , முன்னாள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் பலர் பங்கேற்றனர். (ஐ)

# பெருந்திருவிழா!

வடமராட்சி, பெப். 17

பருத்தித்துறை அருள்மிகு சித்தி விநாயகர் (பெரிய பிள் ளையார்) ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை செவ் வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ச்சியாக 10 நாட்கள் நடைபெறும் இந்தப் பெருந் திருவிழாவில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திரு விழாவும் நடைபெறவுள்ளன.

ஆலய பிரதம குரு சிவசிறீ உலக. புஸ்பராஜாக் குருக்களின் உதவியுடன் இணுவில் சிவஸ்ரீ ஜெயவிருபாட்சசு குருக்கள் பிரதமகுருவாக பெருந்திரு விழாவை நடத்தி வைப்பார். (ஐ-02)

# வரவு - செலவு திட்டத்தில் ஏழைகளுக்கு நன்மைகள்!

## கிளிநொச்சியில் பிரதமர் ஹரிணி

கிளிநொச்சி, பெப். 17

நாளை (இன்று) பாராளு மன்றில் சமர்ப்பிக்கப்படும் வரவு - செலவு திட்டத்தில் ஏழை மக்களுக்கு நன்மை தரக் கூடிய பல்வேறு விடங்கள் உள் ளடக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.


நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் பல்வேறு நிகழ் வுகளில் பிரதமர் ஹரிணி பங் கேற்றார்.

முரசுமோட்டை சந்திப் பிள் ளையார் ஆலயத்தில் வழிபாட் டில் பங்கேற்ற பிரதமர் மக் களை சந்தித்துக் கலந்துரையா டினார்.

இதன்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், அபிவிருத்தித் திட் டம் தொடர்பாகவும் மக்கள் எதிர்நோக்கும் விடயங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்த அவர், மக்களின் பிரச்னை களுக்கு உரிய காலத்தில் நட வடிக்கை எடுக்கப்படும் - என்று உறுதியளித்தார். (ஐ)

# ரணில் - ஜெய்சங்கர் சந்திப்பு!



கொழும்பு, பெப். 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்திய வெளி யுறவு அமைச்சர் கலாநிதி சு. ஜெய்சங்கர் ஆகியோர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

ஓமானில் நடைபெற்றுவரும் எட்டாவது இந்தியப் பெருங் கடல் மாநாட்டின் போது இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்தப் பேச்சின்போது, பிராந்திய ஒத்துழைப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் இரு தரப்பு மற் றும் பல தரப்பு கூட்டாண்மை களை மேம்படுத்த வேண்டிய தன் அவசியம் குறித்தும் வலியு றுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் ஐந்து சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 17

பொலிஸார் நடத்திய சுற்றி வளைப்பில் ஐஸ் போதைப் பொருளுடன் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கம்பஹா - பேலியகொடை எரிபொருள் நிரப்பு நிலையம் அருகே இருவர் கைது செய்யப் பட்டனர். அவர்களில் ஒருவரி டமிருந்து 5 கிராம் 200 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொரு ளும் மற்றையவரிடம் இருந்து 7 கிராம் ஐஸ் போதைப்பொரு ளும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை, கொழும்பு - கிராண்ட்பாஸில் இருவர் கைது செய்யப்பட்டனர். அவர் களில் ஒருவரிடம் 12 கிராம் 490 மில்லிகிராம் மற்றையவ ரிடமிருந்து 6 கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இதேபோன்று, கொழும்பு - மொறட்டுவையில் 7 கிராம் 50 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 36 வயது நபர் கைது செய்யப்பட்டார். (ஐ)

# கசிப்புடன் மூவர் கைது!

முல்லைத்தீவு, பெப். 17

கசிப்பு விற்பனையில் ஈடு பட்டிருந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதே நேரம், இன்னுமொரு சந்தேக நபர் தப்பியோடியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

புதுக்குடியிருப்பு மன்னா கண்டல் பகுதியில் நேற்றுமுன் தினம் ஒட்டுசுட்டான் பொலி ஸார் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை நடத்தினர்.

இதன்போது, கசிப்பு விற்ப னையில் ஈடுபட்டிருந்த மூவர் கைது செய்யப்பட்டனர். மற்றொருவர் தப்பிச் சென்றுள் ளார். கைதானவர்கள் அதே இடத்தைச் சேர்ந்த 37, 36, 29 வயது நபர்களாவர்.

சந்தேகநபர்களை நீதிமன் றில் முற்படுத்த பொலிஸார் நட வடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# விபத்தில் இளைஞர் பலி!

கொழும்பு, பெப். 17

வீதியை விட்டு விலகிய கார் மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் சனிக் கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் 26 வயது இளை ஞரே உயிரிழந்தார்.

சாரதியின் கவனக் குறைவே விபத்துக்குக் காரணம் என்று தெரி விக்கப்பட்டது.

களுத்துறை - பண்டாரகம - கம்மன்பில குளம் அருகே இந்த விபத்து இடம்பெற்றுள் ளது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 17.02.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 05

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# உள்ளூராட்சி தேர்தலை எதிர்கொள்ளுதல்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வரவு - செலவு திட்டத்துக்கு பின்னர் உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதில் நிச்சயம் நாட்டம் கொள்ளும். இந்தத் தேர்தலை எவ்வாறு ஈழத் தமிழ் கட்சிகள் எதிர்கொள்ளவுள்ளன? இலங்கை தமிழ் அரசுக் கட்சி அதிகூடிய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் கட்சியென்னும் வகையில் உள்ளூராட்சித் தேர்தலிலும் அந்தக் கட்சியே வடக்கு - கிழக்கில் ஒப்பீட்டடிப்படையில் அதிக சபைகளை கைப்பற்றுவதற்கான வாய்ப்புண்டு எனலாம். ஆனால், நிலைமை மிகவும் சவாலானதாகவே அமைந்திருக்கும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மையான தமிழ் மக்கள் வாக்களித்திருக்கும் நிலையில் அந்தக் கட்சி வடக்கு - கிழக்கில் கணிசமான உறுப்பினர்களை கைப்பற்றுவதற்கான வாய்ப்புண்டு என்பதையும் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில், தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் தொடர்பில் மக்கள் முன்னரைப் போன்று சாதாரணமாக சாய்ந்துவிடும் நிலைமை தற்போதில்லை.

குறிப்பாக, இலங்கை தமிழ் அரசு கட்சியும் அதேபோன்று தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகளும் பெரும்பாலும் கிராமப்புற மக்களின் வாக்குகளை நம்பியிருக்கும் - அதிலும் பழையவர்களின் வாக்குளை நம்பியிருக்கும் கட்சியாக சுருங்கிவிட்டது. கிராமப்புற இளைய தலைமுறையினர் ஒப்பீட்டடிப்படையில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளை ஆதரித்த போதிலும் நகர்ப்புற நிலைமை பெரும்பாலும் மாற்றமடைந்து வருகின்றது. இதேவேளை, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளும் பெருமளவுக்கு மாற்றமடைந்து கொண்டிருக்கின்றது. முன்னரைப் போன்று உரிமை வாதம் அரசியலில் மேலாதிக்கம் செலுத்தக்கூடிய அரசியல் நிலைமை பலவீனமடைந்து செல்கின்றது.

வெறும் கோஷ அரசியலைக் கொண்டு இனியும் தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்வது மிகவும் கடினமானது. இதனைப் புரிந்து கொண்டுதான், தமிழ்க் கட்சிகளும் தங்களின் உள்ளூராட்சி தேர்தல் வியூகங்களை வகுக்க வேண்டும். இல்லாவிட்டால், உள்ளூராட்சி தேர்தலிலும் தமிழ் கட்சிகள் பின்னடைவுகளையே சந்திக்க நேரிடும். உள்ளூராட்சித் தேர்தலில் நிறுத்தப்படும் வேட்பாளர்கள் அதில் முக்கியத்துவம் பெறுவர்.

கடந்த காலத்தை எடுத்து நோக்கினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவம் செய்த உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் பலர் ஆகக் குறைந்தது சபையில் ஒழுங்காக பேசக்கூடிய ஆற்றல் கூட இல்லாதவர்களாவே இருந்திருக்கின்றனர். இப்படியானவர்கள் எல்லாம் உறுப்பினர்களா என்று கவலைப்படுமளவுக்கே கூட்டமைப்பின் கடந்தகால சபைகள் இருந்திருக்கின்றன.

உள்ளூராட்சி சபையின் விதிகளை படித்து, அதனை உச்சளவில் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைப் புரிந்து கொள்ளும் அடிப்படை அறிவுள்ளவர்களே உள்ளூராட்சி சபைகளை பிரதிநிதித்துவம் செய்ய வேண்டும் - அவ்வாறில்லாது போனால், அதனை உச்சளவில் பயன்படுத்த முடியாமல் போகும். ஈழத் தமிழர் இன்று வந்தடைந்திருக்கும் கையறு நிலை அரசியல் சூழலில், இருக்கும் ஒவ்வொரு கட்டமைப்பையும் உச்சளவில் பயன்படுத்தும் திறனே தமிழர்களுக்கான அரசியலாக இருக்க முடியும். உள்ளூராட்சித் தேர்தலுக்கான வியூகங்கள் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் சிந்திக்கும் போது முதலில் இந்த விடயத்துக்கே முன்னுரிமையளிக்க வேண்டும்.

ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில்

# தமிழில் பயிற்சி வகுப்புக்களை ஆரம்பிக்க பிரதமர் பணிப்புரை



கிளிநொச்சி, பெப்.17

கிளிநொச்சியில் உள்ள ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் இந்தப் பிராந்தியத்திலுள்ள மாணவர்களும் முழுமையாக நன்மையடையும் வகையில் தமிழ் மொழி மூலமான பயிற்சி வகுப்புக்களையும் ஆரம்பிக்குமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள ஜேர்மன் பயிற்சி நிறுவனத்துக்கு பிரதமர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சென்றார். அங்கு வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சு. முரளிதரன் ஆகியோருடன், ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தின் அதிபர் மற்றும் பணியாளர்கள் பிரதமரை வரவேற்றனர். இதன் பின்னர் கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு இளையோர் ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் இணைய முடியாத நிலைமை காணப்படுவதாக மாவட்ட அரச அதிபர் மற்றும் ஆளுநர் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

ஆங்கில மொழி மூலமாக பயிற்சிகள் வழங்கப்படுதல் மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியடைந்திருத்தல் என்பன தகைமையாகக் காணப்படுவதால் கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள் பலர் இணைய முடியாத நிலை நீடிப்பதாக குறிப்பிட்டனர். இந்த நிலையில், தமிழ் மொழி மூலமான பயிற்சிகளை ஆரம்பிக்குமாறு பிரதமர் பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலைத் தொடர்ந்து இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தை பிரதமர், ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர். (எ-05)

# கிளிநொச்சியில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம்

கிளிநொச்சி, பெப்.17

இளைஞர் மற்றும் விளையாட்டு அமைச்சின் கீழ் செயல்பட்டுவரும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் நேற்று முன்தினம் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் ஏ -9 வீதியில் நீதிமன்ற கட்டடம் தொடக்கம் கரடிப்போக்கு சந்தி வரை வீதியில் அமைக்கப்பட்டுள்ள பூச்சாடிகளை துப்புரவு செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தப் பணியில் பெருமளவான இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.(எ)

# 'பிடியளவு கமநிலத்துக்கு' திட்டம் கிளிநொச்சியில் முன்னெடுப்பு



கிளிநொச்சி, பெப்.17

'பிடியளவு கமநிலத்துக்கு ஒன்றிணைவோம்' என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.


கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயிரிடாது காணப்படும் சகல வயல் மற்றும் மேட்டு நிலங்களை வினைத்திறனாகத் துரிதமாகப் பயிரிடுதல் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயல்பாடு இதன்போது முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குரிய விழிப்புணர்வூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு பளை கமநல சேவை நிலையத்திலிருந்து முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் பா. தேவரதன் தலைமையில் உத்தியோகத்தர்கள் இணைந்து இந்த விழிப்புணர்வு செயல் திட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன்போது, மக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை வழங்கி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க கூடாது என்று முடிவெடுப்பீர்கள். உறவினர்களில் உண்மையானவர்களை கண்டறிவீர்கள். கடையை விரிவுபடுத்துவீர்கள்.

**மிதுனம்**
நட்பு வட்டம் விரியும். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்லசெய்தி வரும். தாயாருக்கு கை, கால் வலி வந்து போகும்.

**கடகம்**
தன்னிச்சையாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். புது வாகனம் வாங்குவீர்கள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மோதல்கள் நீங்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆடை, ஆபரணம் சேரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். குடும்பத்தாரை குறைக் கூறிக் கொண்டிருக்க வேண்டாம்.விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

**துலாம்**
ஒரு விஷயத்தை நினைத்து அதிக அளவில் குழப்பம் அடைவீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். நம்பிக்கைக்கு உரியவர்களை கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். சிறப்பான நாள்.

**தனுசு**
பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். குடும்பத்தில் அமைதி நிலவும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் உயரும்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில நேரங்களில் வெறுப்பாக பேசுவீர்கள். குடும்பத்திலுள்ளவர்களிடம் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும்.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள்.

# இழப்பீடுகளை தடுக்கும் கமநல காப்புறுதிச் சபை

## கிளிநொச்சி விவசாயிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, பெப்.17

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் அனர்த்தங்களால் பெரும் பாதிப்பை எதிர் கொண்டாலும் சுற்றுநிருபத்தை காரணம் காட்டி இழப்பீடுகளை நியாயமாக கிடைக்காமல் செய்யும் செயல்பாட்டில் கமநல காப்புறுதிச் சபை ஈடுபட்டுள்ளதாக மாவட்ட கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர் சு. யதீஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் எமது விவசாயிகளை பெருமளவில் பாதித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்களால் கடந்த காலபோகத்தில் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகள் இழப்பீடுகளைப் பெறுவதற்கு கமநல காப்புறுதிச்சபை மூலம் விண்ணப்பித்திருந்த போதும் அதிகாரிகள் அதில் அக்கறை செலுத்தவில்லை. கமநல காப்புறுதிச் சபை, கமநல சேவைகள் மூலம் பயிரழிவுகளின் விவரங்களை உள்வாங்குமாறு கமநல சேவை நிலையங்களை விவசாயிகள் வலியுறுத்தியதன் பிரகாரம் அவர்களும் விவசாயிகளின் பாதிப்பை முழுமையாக பார்வையிடாது இது நோயால் பாதிக்கப்பட்டது.

இந்த அழிவுக்கான இழப்பீடு வழங்க முடியாது என சுற்றுநிருபம் குறிப்பிடுகின்றது. ஆகவே, இழப்பீடு வழங்க முடியாது எனக் கூறியுள்ளனர்.

ஆனால், கடந்த காலத்தில் இவ்வாறான அழிவுகள் இடம்பெற்ற போது இழப்பீடுகள் கிடைத்தன.

தற்போது கமநல காப்புறுதிச்சபை தர மறுக்கின்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் கமநல காப்புறுதிச்சபையிடம் இதுவரை பதிவு செய்யப்பட்ட அழிவு விவரங்களை கோரியுள்ளேன்.

கடந்த காலங்களில் எவ்வாறு வயல் நிலங்கள் அனர்த்தத்துக்கு உள்ளானது என்ற விடயத்தை சமூக வலைத்தளங்கள் மூலமே அவதானிக்க முடிகின்றது.

கடந்த மூன்றாம் திகதி தேசிய சம்மேளன பிரதிநிதிகள் விவசாய அமைச்சரை சந்தித்தனர்.

அமைச்சரிடமும் குறித்த விடயத்தை தெரிவித்திருந்ததாகவும், விவசாயிகளின் பயிரழிவுக்கு கமநல காப்புறுதிச் சபை நியாயமான தீர்வை வழங்க வேண்டும்”- என்றார். (எ)

# அபிவிருத்தி திட்டங்கள் பற்றி கனடா தூதுவர் எரிக் ஆராய்வு



யாழ்ப்பாணம், பெப்.17

வடக்கு - கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்து கனடா தூதுவர் ஆராய்ந்துள்ளார்.

இலங்கைக்கான கனடா தூதுவர் எரிக் வோல்ஸூக்கும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளம் அரசியல் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதன்போது, அரசியல் விடயங்கள் குறித்தும், விசேடமாக தமிழ் மக்கள் தற்போது எதிர்கொள்கின்ற பிரச்னைகள் சம்பந்தமாகவும், கனடா அரசால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும், வடக்கு - கிழக்கில் இன்னும் பல அபிவிருத்தி திட்டங்களை, எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் தற்போதைய அரசினால் முன்னெடுக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களால் தமிழ் மக்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொள்கின்றார்கள் போன்ற விடயங்களும் ஆராயப்பட்டன.

இது தவிர, எதிர்வருகின்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாகவும் கலந் துரையாடப்பட்டது. (எ- 05)

# யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கை அமைச்சர் சுனில்குமார பார்வையிட்டார்



யாழ்ப்பாணம், பெப்.17

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில்குமார கமகே, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனும் இணைந்து யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கை நேற்றையதினம் பார்வையிட்டனர்.

இதன்போது, துரையப்பா விளையாட்டு அரங்கின் தேவைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்தனர். குறிப்பாக ஒளியமைப்பு வசதிகள், பராமரிப்பு வசதிகள் மற்றும் உள்ளக அரங்கு அமைப்பது தொடர்பாகவும் ஆராய்ந்ததோடு இதற்கான திட்ட முன்மொழிவு பொறிமுறை ஒன்றை உருவாக்கித் தருமாறு அமைச்சரிடம் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

மேலும், வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்கனவே சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணி தொடர்பாகவும் அதனுடைய தற்போதைய நிலைமை தொடர்பாகவும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய சட்ட உருவாக்கத்தில் சிவில் சமூக அமைப்புகளை உள்வாங்குக

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 24 அமைப்புகள் கடிதம்

கொழும்பு, பெப். 17

**சிவில் சமூக அமைப்புகள் தொடர்பான புதிய சட்ட உருவாக்கத்தில் சிவில் சமூக அமைப்புகள் முழுமையாக உள்வாங்கப்பட வேண்டும் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் சிவில் சமூக அமைப்புகள் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.**

24 சிவில் சமூக அமைப்புகள் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் கடந்தகால அரசாங்கங்கள் சிவில் சமூக அமைப்புகளை சந்தேகக்கண் கொண்டு நோக்கி வந்திருப்பதுடன், அவை தொடர்பில் நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றன. அதுமாத்திரமன்றி வெளிநாட்டு நிதி பெறும் சிவில் சமூக அமைப்புகளுக்கு எதிராக வலுவான கட்டுப்பாடுகளையும் விதித்திருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் குறிப்பாக கொழும்புக்கு வெளியில் இயங்கிவரும் அநேகமாக சிவில் சமூக அமைப்புகளை அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான செயலகத்தில் தன்னார்வ சமூக சேவை அமைப்புகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யுமாறு அந்த செயலகத்தால் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த அமைப்புகள் ஏற்கனவே கம்பனிச்சட்டத்தின்கீழ் இலாப நோக்கற்ற வரையறுக்கப்பட்ட கம்பனிகளாக பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்நிலையில் கடந்த ஆண்டு டிசெம்பர் 12 ஆம் திகதி அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பான செயலகத்தால் வெளியிடப்பட்ட வழிகாட்டல்களில், சிவில் சமூக அமைப்புக்கள் முன்னரே சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டிருப்பினும், அவை செயலகத்தின்கீழ் பதிவுசெய்யப்படவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்தப் பதிவானது பாதுகாப்பு அமைச்சின் அனுமதி இருப்பின் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும் - என்றும் கூறப்பட்டுள்ளது.

ஆனால், அனுமதிக்கான விண்ணப்பம் பாதுகாப்பு அமைச்சால் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படும் என்றோ அல்லது அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில் குறித்த சிவில் சமூக அமைப்பு எவ்வாறு மேன்முறையீடு செய்வது என்பதிலோ தெளிவுபடுத்தப்படவில்லை.

அதுமாத்திரமன்றி சிவில் சமூக அமைப்புளை கண்காணிப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் இராணுவத்தினருக்கு இடமளிக்கப்படுவதானது பொதுநிர்வாகக்கட்டமைப்பு இராணுவ மயமாக்கப்படுவதற்கும், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் அச்சுறுத்தலுக்கு உள்ளாவதற்குமே வழிகோலும்.

சிவில் சமூக அமைப்புகள் மீதான இத்தகைய அழுத்தங்கள் ஒன்றுகூடுவதற்கான அடிப்படை உரிமையைப் பாதிப்பதுடன் மாத்திரமன்றி சிவில் சமூகத்துக்கும், அரசுக்கும் இடையிலான உறவில் மிக மோசமான விரிசலை ஏற்படுத்தும். புதிதாக தயாரிக்கப்படும் சட்டங்களும் கொள்கைகளும் சிவில் சமூக அமைப்புகளின் செயல்பாடுகள்மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், அதுகுறித்த பேச்சுகளில் சிவில் சமூக அமைப்புகளை உள்வாங்கவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# இ - கடவுச்சீட்டு வழங்கும் முன்னேற்பாடுகள் தீவிரம்

கொழும்பு, பெப். 17

இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் முறையை செயல்படுத்த தேவையான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நீதிமன்றம் விதித்த தடை உத்தரவு நீக்கப்பட்டுள்ளதால், அந்த முறையை செயல்படுத்துவதில் எந்தத் தடையும் இல்லை என்று நீதி பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

இதன்படி, இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் பணியை சுமார் 8 மாதங்களில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

இதேநேரம், 10 இலட்சம் கடவுச்சீட்டுகளை கொள்வனவு செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார். (ஐ)

# 675 கிலோ நெல்லே அரசுக்கு இதுவரை கிடைத்துள்ளது!

கொழும்பு, பெப். 17

அரசாங்கத்துக்கு 675 கிலோ நெல்லே இதுவரை கிடைத்துள்ளது என்று நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் மஞ்சுள பின்னலந்த தெரிவித்துள்ளார்.

அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நெல்லுக்கான உத்தரவாத விலை அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து தங்களால் திறக்கக்கூடிய அனைத்து நெல் களஞ்சியசாலைகளும் திறக்கப்பட்டுள்ளன.

14 சதவீதம் ஈரலிப்புள்ள நெல்லையே அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்துவருகிறது. பெருமளவிலான வயல்களில் இதுவரையில் அறுவடைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

தற்போது 675 கிலோ நெல்லே கிடைத்துள்ளபோதிலும் எமக்கு கிடைத்துள்ள மொத்த நெல்லாக இதனைக் கருதமுடியாது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இரு வாரங்களில் மாத்திரம் 115,043 சுற்றுலாவிகள் வருகை

கொழும்பு, பெப். 17

நாட்டுக்கு கடந்த இரு வாரங்களில் மட்டும் ஒரு இலட்சத்து 15 ஆயிரத்து 43 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த வருடத்தில் கடந்த 13 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 3 இலட்சத்து 67 ஆயிரத்து 804 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் சீனாவிலிருந்தே அதிகளவான சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தபால், உப தபால் அலுவலகங்கள் மூலமாக மூத்தோர் அஸ்வெசும நிதியை பெறலாம்!

கொழும்பு, பெப்.

"அஸ்வெசும" நலத்திட்ட உதவிகளைப் பெறும் குடும்பங்களில், 70 வயதுக்கு மேற்பட்டவர்களை தவிர,

ஏனைய மூத்த குடிமக்களுக்கும் தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் மூலம் மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படும் என்று தேசிய மூத்த குடிமக்கள் தலைமை செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இதுவரை "அஸ்வெசும" உதவித்தொகை பெற்று வரும் மூத்த குடிமக்கள், இந்த மாதத்துக்கான உதவித் தொகையை எதிர்வரும் 20ஆம் திகதி முதல் தபால் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்களூடாக பெற முடியும்.

இந்த மாதம் 17 இலட்சத்து 25 ஆயிரத்து 795 குடும்பங்கள் அஸ்வெசும திட்ட கொடுப்பனவுகளை பெறுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாட்டில் கைதான குற்றவாளி நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்!

கொழும்பு, பெப். 17

வெளிநாட்டில் கைது செய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற சந்தேகநபரான விக்னேஸ்வரம், அவரின் மனைவி ஆகியோர் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டில் தலைமறைவாக இருந்த இருவரும் அண்மையில் வெளிநாட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். கைதானவர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை சந்தேக நபர்கள் இருவரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பொறுப்பில் இருக்கின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# "பாராளுமன்றத்துக்கு எனது கல்வி சான்றிதழ்களை வழங்கமாட்டேன்!"

கொழும்பு, பெப். 17

எனது கல்வி சான்றிதழ்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை.

இந்தக் கோரிக்கைகள் வெறும் அரசியல் தந்திரோபாயங்கள் என்று முன்னாள் சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்துள்ள செவ்வியில் கூறியவை வருமாறு, கல்வி சான்றிதழ்களை வழங்க பாராளுமன்றத்தில் ஒரு முறை உள்ளதா? அத்தகைய பாரம்பரியம் உள்ளதா? இவை இழிவான தந்திரோபாயங்கள். நாங்கள் பாராளுமன்றத்தில் மிக முக்கியமான பணிகளை செய்கிறோம்.

அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வைத்திருந்த பொது மக்களிடையே சந்தேகங்கள் எழுவதைத் தடுக்கவே நான் சபாநாயகர் பதவியிலிருந்து விலகினேன் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

தேசிய மக்கள் சக்தியின் சபாநாயகராக பதவி வகித்த சபுமல் ரன்வல அவரின் கல்வி தகுதி குறித்து எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து இரு மாதங்களுக்கு முன்னர் பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நெல் உத்தரவாத விலையால் விவசாயிகளுக்கு நன்மையே

## விவசாய அமைச்சர் லால்காந்த

கண்டி, பெப். 17

நெல்லுக்கான உத்தரவாத விலையால் விவசாயிகள் நன்மையே அடைந்துள்ளனர் என்று விவசாய காணி, நீர்பாசன அமைச்சர் கே. டி. லால் காந்த தெரிவித்துள்ளார்.

கண்டியில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர்,

நெல்லுக்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்பட்டமை தொடர்பாக பல விமர்சனங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அவை அனைத்தும் எதிரணியின் பிரசாரமே தவிர அதில் உண்மையில்லை.

ஏனெனில், தற்போது அரசு நிர்ணயித்துள்ள விலையை விட அதிக விலை கொடுத்து தனியார் துறையினர் கொள்வனவு செய்வது விவசாயியின் பக்கம் சரியானது.

அவர்களுக்கு அதிக விலை கிடைக்கிறது. எனவே, விவசாயிகள் சார்பாக எந்தப் பாதிப்பும் இல்லை. அவர்களுக்கு நன்மையே கிடைத்துள்ளது.

ஆனால், எதிர்காலத்தில் இதனால் பாவனையாளர்கள் அல்லது நுகர்வோர் பாதிப்படையாது நாம் பார்த்துக் கொள்வோம்.

தற்போது தான் படிப்படியாக அறுவடை ஆரம்பித்துள்ளது. அடுத்தமாதம் அளவில்தான் முறையான அறுவடை ஆரம்பிக்கும்.

காலபோகத்துக்கு முன்னர் பயிர்ச்செய்கை செய்த சில விவசாயிகளே தற்போது அறுவடை செய்கின்றனர். இது மிகவும் குறைந்தளவாகும்.

அடுத்தமாதமளவில் ஏனைய பகுதிகளில் அறுவடைகள் மேற்கொள்ளும்போது அரச நெல் களஞ்சியங்களுக்கு நெல் கிடைக்க வாய்ப்புண்டு.

நெற் கொள்வனவுக்கு போதியளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. விலையும் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் உற்பத்தி திறன் பின்னடையும் அபாயம்!

## மத்திய வங்கி எச்சரிக்கை

கொழும்பு, பெப். 17

**திறமையான தொழிலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதால் ஏற்படும் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் பின்னடைவு ஏற்படும் என்று இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.**

2025ஆம் ஆண்டுக்கான நாணய கொள்கை அறிக்கையை வெளியிட்டு மத்திய வங்கி இதனைக் குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப் புக்காகத் தொழிலாளர்கள் பெருமளவில் வெளியேறுவ தும், நிபுணர்களின் இடம்பெ யர்வு காரணமாக அனுபவம் வாய்ந்த பணியாளர்களை இழப்பதும் வணிகங்களில் தொழிலாளர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும்.

இது உற்பத்தித் திறனில் தொடர்ச்சியான சரிவுக்கு வழிவகுக்கும். இதன்படி, தொழில்துறை உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், மின்சார உற்பத்தி போன்ற துறைகள் காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் அபாயம் அதிகம் உள்ளது.

அமெரிக்காவில் ஏற்படும் கொள்கை மாற்றங்கள், இலங்கையின் வெளிநாட்டுத் துறைக்கு முக்கியமாக உலகளாவிய வர்த்தகம், முதலீடு, மூலதன ஓட்டங்கள், பொருளாதார வளர்ச்சி மற்றும் பணவீக்கம் ஆகியவற்றில் ஏற்ற இறக்கங்களை ஏற்படுத்தக் கூடும்.

இதனிடையே இந்த ஆண்டின் ஜனவரி மாத கணக்கெடுப்பின்படி, அரசாங்க செலவினம் மற்றும் ஊதிய உயர்வு, தனியார் வாகன இறக்குமதி மீதான தடையைத் தளர்த்துவதன் மூலம் ரூபாயின் பெறுமதி வீழ்ச்சி, உலகளாவிய பொருட்களின் விலை உயர்வு மற்றும் பண்டிகை மாதங்களில் அதிக தேவை போன்ற காரணிகளால்,

எதிர்வரும் 3 மாதங் களில் எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியான அதிகரிப்பு அல்லது நீண்ட கால அதிகரிப்பு ஏற்படக்கூடும் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 16 இலட்சம் அங்கவீனர்கள் நாடு முழுவதும் உள்ளனர்

## 9 இலட்சம் பேர் பார்வையற்றோர்


கண்டி, பெப். 17

நாட்டில் 16 இலட்சம் அங்கவீனர்கள் உள்ளனர். இவர்களில் 9 இலட்சம் பேர் பார்வை குறைபாடுடையவர்கள் என்று அகில இலங்கை பார்வைக் குறைபாடுடையவர்கள் சங்கத்தின் செயலாளர் பிரசன்ன விக்கிரமசிங்க நேற்று தெரி வித்தார்.

மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபயகோனுடனான சந்திப்பின்போதே இவர் இதனைக் கூறினார்.

மத்திய மாகாணத்திலுள்ள பார்வை குறைபாடுடையவர்களின் பிரச்னைகள் தொடர்பில் இந்த சந்திப்பில் ஆராயப்பட்டதுடன், அது தொடர்பில் மனு ஒன்றும் ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# பட்ஜெட் இறுதி ஆவணத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி!



கொழும்பு, பெப். 17

தேசிய மக்கள் சக்தியின் கன்னி பட்ஜெட் இன்று திங்கட்கிழமை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் இறுதி ஆவணத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று ஞாயிற்றுக் கிழமை மேற்பார்வையிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அவர் இதனை பார்வையிட்டிருந்தார். இதன் போது, நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தனவும் உடனிருந்தார். (ஐ)

# வாகன இறக்குமதி பிரச்னைகளுக்கு அரசாங்கம் தீர்வு காண்பது அவசியம்!

## வாகன இறக்குமதியாளர்கள்

கொழும்பு, பெப். 17

வாகன இறக்குமதியில் ஏற்பட்டுள்ள பிரச்னைகளுக்கு அரசாங்கம் அவசர தீர்வு காண்பது அவசியம் என்று வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பதி மெரெஞ்சிகே தெரிவித்தார்.

வாகனங்களை இறக்குமதி செய்யும்போது ஜப்பானின் முன்னணி வங்கிகள் எதுவும் இலங்கையின் கடன் கடிதங்களை ஏற்றுக்கொள்வதில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுமார் 5 ஆண்டுகளாக தற்காலிகமாக தடை செய்யப்பட்டிருந்த தனியார் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்ய அனுமதிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தனிப்பட்ட பயன்பாட்டுக்காகப் பயன்படுத்தப்படும் கார், வான், பேருந்துகள், பொருட்களைக் கொண்டு செல்லப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், சிறப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மோட்டார் இயந்திரங்களைப் பயன்படுத்தாத பிற பொருட்களை இறக்குமதி செய்ய அதிவிசேட வர்த்தமானி மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 36 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் பெண் கைது

கொழும்பு, பெப். 17

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுமார் 36 கோடி ரூபாய் பெறுமதியான ஹஷிஷ் போதைப்பொருளுடன் வெளிநாட்டு பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடா - ரொறன்றோவிலிருந்து நேற்று முன்தினம் இரவு நாட்டுக்கு வந்த 36 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இலங்கை சுங்கத்துறைக்கு கிடைத்த சர்வதேச புலனாய்வு தகவலைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்றும் அவர் கொண்டு வந்த இரண்டு பயண பைகளில் சூட்சுமமான முறையில் 36.5 கிலோ ஹஷிஷ் போதைப் பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்கள் வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பும் நோக்கில் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர். மேலதிக விசாரணைகளுக்காக போதைப்பொருளுடன் கனடிய பெண் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்ப டைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பெண்ணுடன் தகாத உறவு; ஒருவர் அடித்துக் கொலை!

இரத்தினபுரி, பெப். 17

தகாத உறவால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் பொல்லால் அடித்துக் கொல்லப்பட்டார்.

இரத்தினபுரி - கலவான பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே பகுதியை சேர்ந்த 35 வயது நபரே அடித்துக் கொல்லப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பெண் ஒருவர் கணவரை விட்டு பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில் கொல்லப்பட்ட நபர் அந்தப் பெண்ணுடன் உறவில் இருந்துள்ளார்.

இந்த நிலையில், வெள்ளிக் கிழமை இரவு பெண்ணின் வீட்டுக்கு கணவர் சென்றுள்ளார். அப்போது, கொலையான நபரும் இருந்துள்ளார். இதன் போது, பெண்ணின் கணவருக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இது கைகலப்பானதில் பெண்ணின் கணவர் அந்த நபரை பொல்லால் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் அவர் சிகிச்சை பலனின்றி நேற்றுமுன் தினம் சனிக்கிழமை உயிரிழந் தார்.

இந்த சம்பவம் தொடர்பாக 39 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். பொத்துப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஒரு மாதத்தில் 15,000 பேர் கைது

கொழும்பு, பெப். 17

போதைப்பொருட்களுடன் தொடர்புடைய குற்றங்களுடன் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் சுமார் 15 ஆயிரம் பேர் கைதாகியுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி 12ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் குற்றங்கள், போதைப்பொருள் மற்றும் போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பான விசேட நடவடிக்கையின்போது இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கையில் குற்றங்களுடன் நேரடி தொடர்புடைய 922 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 14 ஆயிரம் பேரும் கைது செய்யப்பட்டனர் - என்றார். (ஐ)

# வெப்பநிலை அதிகரிப்பு குறித்து கல்வி அமைச்சில் கலந்துரையாடல்!

கொழும்பு, பெப். 17

நாட்டில் வெப்பநிலை அதிகரித்து வருவதால் பாடசாலை மாணவர்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனிடையே, பாடசாலை மாணவர்கள் விளையாட்டுப் பயிற்சிகள் உள்ளிட்ட செயல்பாடுகளில் ஈடுபடும்போது அதிக வெயிலில் இருப்பதைத் தவிர்க்குமாறும் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ அறிவித்துள்ளார்.

இலங்கை உட்பட உலகின் மத்திய ரேகை பகுதியில் உள்ள பல நாடுகளில் தற்போதைய நாட்களில் அதிக வெப்பநிலை நிலவுகிறது. ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள நாடுகளும் அதிக வெப்பத்தால் பாதிக்கப்படுகின்றன.

நாட்டில், மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, காலி, இரத்தினபுரி, அநுராதபுரம் மாவட்டங்களில் வெப்பநிலை 32 - 36 பாகை செல்சியஸ்வரை வரும் நாட்களில் அதிகரிக்கும்.

இதனால், உடல் வெப்பநிலை அதிகரித்து பல உடல்நல பிரச்னைகளை ஏற்படக்கூடும் என்பதால் அதிகளவில் தண்ணீர், இயற்கை பானங்களை பருகுமாறு சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் ஐ. நா. குழு தீவிர கரிசனை!

கொழும்பு, பெப். 17

**சிறுவர் திருமணம், வீட்டு வன்முறைக்கு இடமளிக்க கூடிய முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டம் தொடர்பில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை முடிவுக்கு கொண்டுவருவதற்கான ஐக்கிய நாடுகள் குழு தீவிர கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.**

இலங்கை தொடர்பான ஒன்பதாவது காலாந்தர அறிக்கையை பரிசீலித்தமையைத் தொடர்ந்தே அந்தக் குழு கரிசனையை வெளிப்படுத்தியுள்ளது.

நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் பெண்களின் தேவைகளை பூர்த்திசெய்வதை இலக்காகக் கொண்ட நேர்மறை நகர்வாக பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய நிகழ்ச்சித் திட்டம் அமைந்திருப்பதாக சுட்டிக்காட்டியுள்ள ஐ. நா. குழு இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் நடுத்தரகால மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதா? என கேள்வியெழுப்பியுள்ளது.

இதேவேளை கடந்த 2022 ஆம் ஆண்டு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அச்சட்டம் இன்னமும் கரிசனைக்குரிய பலகூறுகளை உள்ளடக்கியிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளது. ,

சிறுவர் திருமணத்தை நீக்குதல் உள்ளடங்கலாக இச்சட்டத்தை மேலும் திருத்துவதற்கான திட்டங்கள் உள்ளனவா என்றும் வினவியுள்ளது.

இதேபோன்று "இலங்கையில் ஐவரில் ஒருவர் என்ற விகிதாசாரத்தில் பெண்கள் தமது மிக நெருங்கிய துணைவரால் வன்முறைக்கு உள்ளாகின்றனர். இருப்பினும், அவற்றில் பெரும்பாலான சம்பவங்கள் குறித்து முறைப்பாடளிக்கப் படுவதில்லை.

இந்நிலையில் வீட்டு வன்முறையை தடுப்பதற்கான சட்டத்தில் உத்தேச திருத்தங்களை மேற்கொள்வதற்கான காலப்பகுதி நிர்ணயிக்கப்பட்டுள்ளதா? அத்தகைய வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு எவ்வாறான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது?" எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்படி குழு வினயெழுப்பியுள்ளது.

# 13 இலங்கையர்கள் மியன்மார் முகாமிலிருந்து மீட்கப்பட்டனர்

கொழும்பு, பெப். 17

மியன்மாரில் உள்ள இணையவழி மோசடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 இலங்கையர்களில் 13 பேர் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர்களில் 20 முதல் 30 வயதுக்கு உட்பட்ட 11 இளைஞர்களும் இரு யுவதிகளும் அடங்குவர்.

அவர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்றும் தாய்லாந்து எல்லையில் இருந்து பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரகத்துக்குஅழைச் செல்லப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களை விரைவாக இலங்கைக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில்,

மேலும் நாள்கு இலங்கையர்கள் மியன் மாரில் தனித்தனியாக இணை யவழி மோசடி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை விரைவில் மீட்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அண்மையில் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் மற்றும் மியன்மார் பிரதிப் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடிய போது,

இந்த இணையவழி மோசடி முகாம் நடவடிக்கைகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற் கான உதவியை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கோரினார்.


இந்த இராஜதந்திர முயற்சிகளின் விளைவாக,

மொத்தம் 13 இலங்கையர்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளதாக வட்டா ரங்கள் தெரிவித்தன. (ஐ)

# இந்திய பிரதமரை சந்திக்கிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்!

கொழும்பு, பெப். 17

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனிக் கிழமை இந்தியா செல்கிறார். இந்த பயணத்தின்போது இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார்.



ஓமானில் நடைபெறும் 8ஆவது இந்து சமுத்திர மாநாட்டில் சிறப்பு அதிதியாக பங்கேற்றுள்ள ரணில் விக்கிர மசிங்க எதிர்வரும் புதன்கிழமை நாடு திரும்புகிறார். இதன் பின்னரே அவர் புதுடில்லி செல்கிறார்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்த பின்னர் இலங்கை - இந்திய கூட்டுத் திட்டங்கள் இழுபறிநிலையை எதிர்கொண்டுள்ளன. இந்த நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு பயணமாகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் நிலக்கரி, டீசல் மாபியாக்கள் மீளெழும்!

## சம்பிக்க ரணவக்க குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 17

நாட்டில் மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலமான மின் உற்பத்திகளை வரையறுப்பதற்காக இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்களை உள்ளடக்கி விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. மீண்டும் நிலக்கரி மற்றும் டீசல் மாபியாக்களை தலைதூக்கச் செய்வதற்காகவே அரசாங்கம் இவ்வாறானதொரு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது என்று முன்னாள் அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைக்கமைய எதிர்காலத்தில் காற்றாலை, சூரிய மின்உற்பத்தி திட்டங்களின் நிலைமை கேள்விக்குறியே. நாடளாவிய ரீதியில் மின் தடை ஏற்படுவதற்கு முதல் நாள், அதாவது கடந்த 7ஆம் திகதி இலங்கை மின்சார சபையால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.



காற்றாலை, சூரிய மற்றும் நீர் மின்னுற்பத்திகளை வரையறுப்பது தொடர்பிலேயே அந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களை இவற்றை முற்றாக இல்லாமலாக்குவதற்கான நடவடிக்கைகளையே தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. புதிய அரசாங்கத்தின் கீழ் மீண்டும் நிலக்கரி, டீசல் மாபியாக்கள் தலைதூக்கவுள்ளன. இது மிகவும் கவலைக்குரியதாகும்.

கடந்த காலங்களில் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் எம்மால் கட்டியெழுப்பப்பட்ட இந்த மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்டங்களே இன்று நாட்டில் பிரதான மின்னுற்பத்தி மூலங்களாகவுள்ளன. இவை அனைத்தையும் சீர்குலைக்கும் வேலைத்திட்டங்களை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. இதற்காகவே இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர்கள் பலரை உள்ளடக்கி இந்த விசேட குழு நியமிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலைமையின் கீழ் அதானி மாத்திரமின்றி சகல சர்வதேச முதலீட்டாளர்களும் வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. கடந்த காலங்களில் மன்னார் காற்றலை மின் உற்பத்தி திட்டங்களை முன்னெடுப்பதற்கு 50 இலட்சம் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாக அதானி நிறுவனம் முதலீட்டு சபைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதனை அடிப்ப டையாகக் கொண்டு ஏனைய முதலீட்டாளர்களும் சிந்திப்பர்.

எந்த வொரு முதலீட்டாளருக்கும் போட்டித்தன்மை இன்றி வலு சக்தி துறையில் அதிகாரத்தை வழங்க வேண்டிய தேவை கிடையாது - என்றார். (ஐ)

# உள்ளூராட்சி சட்டமூலம் மீதான விவாதம் இன்று!

கொழும்பு, பெப். 17

உள்ளூராட்சி அதிகார சபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தொடர்பான சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வியாக்கியானமளித்துள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பின் சாராம்சத்தை சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன வெள்ளிக்கிழமை விசேட சபை அமர்வில் வாசித்தார்.

சட்டமூலம் முழுமையாகவும், மற்றும் குறிப்பாக 2 மற்றும் 3 ஆம் வாசகங்கள் அரசியலமைப்பின் 12(1) ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதால், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க விசேட பெரும்பான்மையின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று நீதியரசர்கள் குழாமில் பெரும்பான்மையினராகிய இரண்டு நீதியரசர்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

நீதியரசர் குழாமில் மீதமுள்ள ஒரு நீதியரசர், சட்டமூலம் முழுமையாகவும் அல்லது அதன் எந்தவொரு ஏற்பாடும் அரசியலமைப்புடன் முரண்படவில்லையென்பதால் அதனை பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையொன்றினால் நிறைவேற்ற முடியும் என தீர்ப்பளித்துள்ளார்.

இதற்கமைவாக சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இன்று திங்கட்கிழமை நடைபெறுவதுடன்,

சட்டமூலத்தை இன் றைய தினமே வாக்கெடுப்புடன் நிறைவேற்றவும் தீர்மானித்துள்ளது.

வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்படும் சட்டமூலத்தை சபாநாயகர் நாளை செவ்வாய்க் கிழமை சான்றுரைப்படுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# 1434 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது

கொழும்பு, பெப். 17

கசிப்பு உற்பத்திக்கான 1,434 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கேகாலை - தெரணியகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யட்டிவல பகுதியில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் இந்த நபர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் 8 பீப்பாய்களில் கோடா கைப்பற்றப்பட்டது. கைதான நபர் அதே இடத்தை சேர்ந்த 37 வயது நபராவார். (ஐ)

# வெவ்வேறு விபத்துகளில் நால்வர் உயிரிழந்தனர்!

கொழும்பு, பெப். 17

நாட்டில் வெவ்வே இடங்களில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்துகளில்ஒரு பொலிஸ் அதிகாரி உட்பட நால்வர் உயிரிழந்தனர்.

மாத்தறை - திக்வெல்ல - /ஹன்னதெனிய பகுதியில் பவுஸர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் 3 வது சிறுமி உட்பட இருவர் படுகாயமடைந்தனர். எனினும், இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் உயிரிழந்தார். இவர் ஒரு பொலிஸ் அதிகாரியாவார்.

பதுளை - இபலோகம பொலிஸ் பிரிவில் மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர் திசையில் இருந்து வந்த சிறிய லொறியுடன் நேருக்கு நேர் மோதிய விபத்தில் 29 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, புத்தளம் வென்னப்புவவில் கொழும்பு வீதியில் வீதியை கடந்த பெண்ணை பேருந்து மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரழந்தார்.

கொழும்பு - பாதுக்கை பகுதியில் நடந்து சென்றவரை லொறி மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

அதே இடத்தை சேர்ந்த 39 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்டோவை காணவில்லை



கல்முனை, பெப்.17

வீதியில் நிறுத்தி வைக்கப்பட்ட ஓட்டோ ஒன்று காணாமல் போன சம்பவம் தொடர்பில் கல்முனை பொலிஸ் நிலையம் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளது.

அம்பாறை, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பிரிவிற்குட்பட்ட தனியார் மருத்துவமனைக்கு முன்பாக கடந்த 13 ஆம் திகதி இரவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஏ. பி. ஐ. - 4194 இலக்கமுடைய ஓட்டோவே காணாமல் போயுள்ளதாக கடந்த 14 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டிற்கமைய கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸாரின் பணிப்புரைக்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலில் கல்முனை குற்றப்புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி அலியார் றபீக் தலைமையிலான குழுவினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், தகவல் தெரிந்தால் 067 222 9222 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு பொதுமக்களை பொலிஸார் கேட்டுள்ளனர். (எ-01)

# ரூ.8 இலட்சம், போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் சிக்கினர்!

கல்முனை, பெப்.17

**சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்ட 8 இலட்சத்துக்கும் அதிகமான பணம் மற்றும் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.**

நேற்று முன்தினம் அதிகாலை 02. 30 மணியளவில் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அடையாளம் காணப்பட்ட போதைப் பொருள் விற்பனை மற்றும் போதைப்பொருள் பாவனையாளர்களின் வீடுகளில் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். கே. இப்னு அஸாரின் பணிப்புரைக்கமைய விசேட தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, ஐஸ் போதைப்பொருள், இலத்திரனியல் தராசு, 8 இலட்சத்து 93, 840 ரூபாய் பணத்துடன் 29 வயது பெண், 22 வயது இளைஞன் என இருவர் கைதாகினர்.

இந்தச் சோதனை நடவடிக்கையில் கல்முனை, சவளக்கடை, சம்மாந்துறை ,பெரிய நீலாவணை, சாய்ந்தமருது, காரைதீவு,

பொலிஸ் நிலையங் களில் கடமை புரியும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் இணைந்து ஈடுபட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர்



பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# "மட்டு. பட்டிருப்பு கல்வி வலயத்தில் 278 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை"

மட்டக்களப்பு, பெப்.17

மட்டக்களப்பு, பட்டிருப்பு கல்வி வலயத்தில் 278 ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதாக பட்டிருப்பு கல்வி வலயத்தின் பணிப்பாளர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பட்டிருப்பு கல்வி வலயம் ஏற்பாடு செய்த தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் செட்டிப்பாளையம் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று மற்றும் மண்முனை - தென் எருவில் பற்று ஆகிய இரண்டு பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கியதாக பட்டிருப்பு கல்வி வலயம் இயங்கி வருகின்றது.

எமது கல்வி வலயத்தில் 23, 338 மாணவர்கள் கல்வி கற்று



வருகின்றனர். 1638 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.


இன்னும், 278 ஆசிரியர்கள் பற்றாக்குறையாகவுள்ளது. விசேடமாக கணித பாட ஆசிரியர்கள், விஞ்ஞானபாட ஆசிரியர்கள், ஆங்கிலமொழி கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் உள்ளிட்ட பல ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

நாங்கள் தற்போது ஆரம்பக் கல்வியில் சாதனை படைத்த மாணவர்களைத்தான் கௌரவித்திருக்கின்றோம். எமது கல்வி வலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்பிப்பதற்காக மாத்திரம் 212 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை இருந்தும் எமது கல்வி வலயம் ஆரம்பக் கல்விப் பிரிவிலே பல சாதனைகளை புரிந்துள்ளது"- என்றார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜே. ஜே. முரளிதரன் கலந்து கொண்டார். (எ)

# 'அழகான கடற்கரை' திட்டம் வெற்றிகரமாக முன்னெடுப்பு



கல்முனை, பெப்.17

"கிளீன் சிறிலங்கா" திட்டத்தின் ஓர் அங்கமாக "அழகான கடற்கரை" எனும் செயல் திட்டத்தின் கீழ் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரையோரங்களை சிரமதானம் மூலம் துப்புரவு செய்யும் விசேட வேலைத்திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

கல்முனை மாநகர சபையும் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பிரதேச செயலகங்களும் இணைந்து 09 கடற்கரை பிரதேசங்களில் ஏற்பாடு செய்த இந்த வேலைத்திட்டம் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ. ரி. எம். றாபி தலைமையில் நடைபெற்றது.

இதில், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, பிரதேச செயலாளர் எம். எம். ஆஷிக் மற்றும் உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

அத்துடன் பொலிஸார், முப்படையினர் மற்றும் சிவில் அமைப்பினரும் இதில் பங்கு பற்றி ஒத்துழைப்பு வழங்கினர்.

கல்முனை மாநகர சபை சார்பில் 300 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டு சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் கனரக இயந்திரங்களும் முழுமையாக பயன்படுத்தப்பட்டன.

காலை 07. 30 மணி தொடக்கம் முற்பகல் 11. 30 மணி வரை 09 கடற்கரை பிரதேசங்களில் ஒரே நேரத்தில் இவ்வேலைத் திட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. (எ)

# கடற்கரையோரங்களில் 'கிளீன் சிறிலங்கா' திட்டம்



திருகோணமலை, பெப்.17

கிண்ணியா கடற்கரையோரப் பகுதிகளில் "கிளீன் சிறிலங்கா" வேலைத்திட்டம் நேற்றுக்காலை முன்னெடுக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் மற்றும் கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி, நகர சபைச் செயலாளர் உட்பட அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

குறித்த வேலைத்திட்டத்தின் மூலம் கடலோரப்பகுதிகள் மற்றும் பஸ் தரிப்பிட நிலையம் உள்ளிட்ட பகுதிகள் சுத்தப் படுத்தப்பட்டன. (எ)

# 'பிடியளவு கமநலத்துக்கு' வேலைத்திட்டம் ஆரம்பம்

திருகோணமலை, பெப்.17

"பிடியளவு கமநிலத்துக்கு" திட்டத்தின் கீழ் இலங்கை முழுவதும் வினைத்திறன் மிக்க விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் தேசிய வேலைத்திட்டம் நேற்று முன்தினம் கிண்ணியா, குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையத்தால் குறிஞ்சாக் கேணி விவசாயப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

குறிஞ்சேக்கேணி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் யுனைதீன் முஹம்மத் சாஜித் தலைமையின் கீழ் நடைபெற்று இந்த நிகழ்வில், விவசாய சம்மேளனங்களின் தலைவர்கள், கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்ட வருண ஜெயசுந்தர, மட்டக்களப்பிலுள்ள சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிமனையில் கடந்த 14 ஆம் திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளர்ச்சியாளர்கள் துப்பாக்கிச்சூடு கொங்கோவில் 70 பேர் உயிரிழப்பு!

கின்ஷாசா, பெப்.17

**கொங்கோவில் உள்ள தேவாலயத்துக்குள் கிளர்ச்சியாளர்கள் நுழைந்து துப்பாக்கிச்சூடு தாக்குதல் நடத்தினர். இதில், 70 பேர் உயிரிழந்தனர்.**

மேற்கு மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசு, கிழக்கு பகுதியில் ருவாண்டா நாட்டுடன் தனது எல்லையை பகிர்ந்து கொண்டுள்ளது. நாட்டின் கனிம வளங்கள் நிறைந்த சொர்க்கபூமியாக எல்லை பகுதியில் அமைந்துள்ள வடக்கு கிவூ, தெற்கு கிவூ உள்ளிட்ட மாகாணங்கள் விளங்குகின்றன.

இதனால், அங்கு சுரங்கங்கள் தோண்டி கொங்கோ ஜனநாயக குடியரசு அரசாங்கம் கனிம வளங்களை வெட்டி எடுத்து வருகிறது. இந்த நிலையில், ருவாண்டா நாட்டின் ஆதரவு பெற்ற எம் - 23 என்ற கிளர்ச்சியாளர்கள் குழு இந்தப் பகுதிகளை சுற்றிவளைப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்தது. இதனால், கடந்த மாதம் தொடங்கி அங்கு தொடர் வன்முறை ஏற்பட்டு வருகிறது.

இதற்கிடையே, தெற்கு கிவூ நகரை எம் - 23 கிளர்ச்சியாளர்கள் குழுவினர் சுற்றிவளைத்து கைப்பற்றினர். இந்த நிலையில் நேற்று முன்தினம் அந்த மாகாணத்தின் முக்கிய நகரமான புகாவு நகரை கைப்பற்றி விமான நிலையத்தை முற்று கையிட்டனர். முன்னதாக அங்குள்ள தேவாலயத்துக்குள் பதுங்கியிருந்து செயல்பட்டு வந்த கொங்கோ இராணுவத்தினர் குறித்து அறிந்த கிளர்ச்சியாளர்கள் குழுவினர் அங்கு சென்று சரமாரி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில், இராணுவத் தினர் உட்பட 70 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். (எ)

# பணய கைதிகள் விவகாரம் இஸ்ரேலுக்கு ட்ரம்ப் ஆதரவு

வாஷிங்டன், பெப்.17

பணயக் கைதிகள் விவகாரத்தில் இஸ்ரேல் எடுக்கும் முடிவுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், "இஸ்ரேல் பணயக் கைதிகள் விவகாரத்தில் என்னுடைய நிலைப்பாடு கடினம் வாய்ந்த ஒன்றாக இருக்கும். இஸ்ரேல் என்ன செய்யப் போகிறது என்பது பற்றி நான் உங்களிடம் கூற முடியாது. இதுவரை விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளின் தோற்றம் பார்ப்பதற்கு வருத்தம் அளிக்கும் வகையில் உள்ளது.

அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டுமென நான் விதித்திருந்த காலக்கெடு சனிக்கிழமை மதியம் 12. 00 மணியுடன் முடிவடைந்த நிலையில், அதுபற்றி இஸ்ரேல்தான் இனி முடிவு செய்ய வேண்டும். அவர்கள் எடுக்கும் முடிவுக்கு அமெரிக்கா ஆதரவளிக்கும்"- என்றார்.

இந்த விவகாரம் குறித்து ஹமாஸ் அமைப்பு கூறுகையில், பணயக் கைதிகளை விடுவிப்பதில் காலதாமதம் ஏற்படும் என்றும் அது தள்ளிப்போகக் கூடும் என்றும் தெரிவித்திருந்தது. இஸ்ரேல் போர்நிறுத்த ஒப்பந்த மீறலில் ஈடுபட்டுள்ளது என்றும் அந்த அமைப்பு குற்றச் சாட்டை முன்வைத்திருந்தது. (எ)

# இஸ்ரேல் பணய கைதிகளை விடுதலை செய்தது ஹமாஸ்



காஸா, பெப்.17

இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 3 பேரை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஓராண்டுக்கு மேலாக நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசம் உள்ள இஸ்ரேல் பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது.

இந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்தப்படி இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 3 பேரை ஹமாஸ் அமைப்பு நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது. யாஹர் ஹரன் (வயது- 46), அலெக்ஸ்சாண்டர் ருபெனோ (வயது - 29), சஹொய் டிகெல் ஷென் (வயது -36) ஆகிய 3 பேரை ஹமாஸ் விடுதலை செய்துள்ளது.

இதற்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளில் 369 பேரை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது. இதில் 36 பேர் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டனர் என்று இஸ்ரேல் ஆயுள் தண்டனை விதித்த கைதிகள் ஆவர். (எ)

# சைபீரியாவில் நிலநடுக்கம்!



மொஸ்கோ, பெப்.17

ரஷ்யாவின் தெற்கு சைபீரியாவில் உள்ள அல்டார் குடியரசு பகுதியில் நேற்றுக் காலை 08. 48 மணிக்கு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவு கோலில் 6. 4 ஆக பதிவாகியிருப்பதாக ரஷ்ய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இருப் பினும், சில இடங்களில் கட் டடங்கள் சேதமடைந்துள்ள தாகவும், பொது நிகழ்ச்சிகள் உள்ளிட்டவை இரத்துச் செய்யப்பட்டு, சேதங்களை சரிசெய்யும் பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (எ)

# இளைஞனை படகுடன் விழுங்கிய திமிங்கலம்

சான்டியாகோ, பெப்.17

சிலியில் சிறிய படகில் சாகச பயணம் மேற்கொண்ட இளைஞனை திமிங்கலம் ஒன்று விழுங்கிய வீடியோ வைரலாகி வருகிறது.

சிலி நாட்டின் தெற்கே பாடகோனியா மண்டலத்துக்கு உட்பட்ட மேகல்லன் நீரிணை பகுதியில் நேற்று முன்தினம் டெல் சிமன்காஸ் என்பவர், அவருடைய மகன் ஆத்ரியன் (வயது - 24) என்பவருடன் படகில் சவாரி செய்துள்ளார். அவர்கள் இருவரும் தனித்தனியாக படகுகளில் சென்று, சாகச பயணம் மேற்கொண்டபோது, ஆத்ரியன் படகில் முன்னே செல்ல, டெல் அவரை மற் றொரு படகில் பின்னால் தொடர்ந்து சென்றிருக்கிறார். டெல், தூரத்தில் இருந்தபடி கடலின் அழகை வீடியோவாக பதிவு செய்து உள்ளார். இந்தத் தரு ணத்தில் நடுக்கடலில் பயணித்தபோது, திடீரென திமிங்கல கூட்டம் ஒன்று அந்த வழியே சென்றுள்ளது.

உருவத்தில் மிகப் பெரிய, ஹம்பேக் வகையை சேர்ந்த அந்த திமிங்கலங்களில் ஒன்று, டெல்லின் மகனை படகுடன் சேர்த்து விழுங்கியுள்ளது. இதனை டெல் வீடியோவாக எடுத்திருக்கிறார். எனினும், சில விநாடிகளில் ஆத்ரியனை அந்த திமிங்கலம் வெளியே விட்டது. அப்போது டெல், மகனை நோக்கி அமைதி யாக இரு, படகை பிடித்து கொள், அமைதியாக இரு என கூறியுள்ளார். இந்த திகிலூட்டும் சம்பவம் பற்றி ஆத்ரியன் கூறும்போது, நான் தற்செயலாக பார்க்கும்போது, அடர் நீலம் மற்றும் வெண்மை கலந்த நிறத்தில் பின்னால் இருந்து ஏதோவொன்று என்னை நோக்கி வந்தது என அதிர்ச்சியுடன் கூறினார்.

என்ன நடக்கிறது என அவர் அறிந்து கொள்வதற்கு முன்பே, ஆத்ரியனை திமிங்கலம் விழுங்கியுள்ளது. அது விழுங்கி, தின்று விட் டது என்றே பயந்து விட்டேன் என ஆத்ரியன் கூறியுள்ளார். எனினும், அவரை திமிங்கலம் வெளியே விட்டதும் நிலை மையை உணர்ந்து, உயிருடன் இருக்கிறோம் என தெரிந்து கொண்டார். ஆனால், தந்தைக்கு ஏதேனும் ஆகி விட போகிறது என்று ஆத்ரியன் பயந்து போயிருக்கிறார்.

எனினும், தந்தை மற்றும் மகன் என இருவரும் எப்படியோ பாதுகாப்பாக கரைக்கு வந்து சேர்ந்து விட்டனர். (எ)

# நாம் 80 கோடி மக்களுக்கு உணவு வழங்குகிறோம்

## இந்திய அமைச்சர் ஜெய்சங்கர்

முனிச், பெப்.17

"நாங்கள் 80 கோடி மக்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் உணவை வழங்கி வருகிறோம்"- இவ்வாறு இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

ஜேர்மனியின் முனிச் நகரில் கடந்த 14ஆம் திகதி தொடங்கி 3 நாட்கள் (நேற்று வரை) பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் சர்வதேச அளவிலான பாதுகாப்பு - சவால்கள் பற்றி ஆராயப்பட்டன.

இதில், இந்தியா சார்பில் அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார். அப்போது, அமெரிக்க செனட் உறுப்பினரான ஸ்லாட்கின் கூறுகையில், "ஜனநாயகம் உங்களுடைய மேசை மீது உணவைக் கொண்டு வந்து வைக்காது"- என்றார்.

இதற்குப் பதிலளித்த ஜெய்சங்கர், "உங்கள் மேசை மீது வந்து ஜனநாயகம் உணவை வைக்காது என நீங்கள் கூறுகிறீர்கள்.

உண்மையில், உலகின் என்னுடைய பகுதியில் ஜனநாயகம் அதனை செய்கிறது. நாங்கள் ஜனநாயக சமூகத்தில் இன்று இருக்கிறோம். நாங்கள் 80 கோடி மக்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் உணவை வழங்கி வருகிறோம்"- என்றார். (எ)

# போப்பாண்டவர் பிரான்சிஸ் உடல்நிலை சீராகவுள்ளது

ரோம், பெப்.17

போப்பாண்டவர் பிரான்சிஸ் உடல்நிலை சீராக உள்ளதாக வாடிகன் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான போப் பிரான்சிஸ் (வயது - 88), மூச்சுக்குழாய் அழற்சியால் அவதிப்பட்ட நிலையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு கடந்த வாரம் வியாழக்கிழமை உடல் நல பாதிப்பு ஏற்பட்ட நிலையில், பிரார்த்தனை கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வந்தார்.

இருப்பினும் தனக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருப்பதாக போப் பிரான்சிஸ் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் நேற்று முன்தினம் போப் பிரான்சிஸ் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

முதற்கட்ட பரிசோதனைகளில் அவருக்கு சுவாசக்குழாய் தொற்று மற்றும் லேசான காய்ச்சல் இருப்பது தெரியவந்தது. வாடிகன் தேவாலயத்தில் இன்று திங்கட்கிழமை வரை போப் பிரான்சிஸ் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில், போப் பிரான்சிஸ் உடல்நிலை சீராக உள்ளதாக வாடிகன் தேவாலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், வாடிகன் நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பில் கன்னியாஸ்திரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இத்தாலியை சேர்ந்த கன்னியாஸ்திரி ரபேலா பெட்ரினி, கத்தோலிக்க திருச்சபையின் தாயகமான ரோமில் உள்ள 108 ஏக்கர் பரப்பளவு கொண்ட வாடிகன் பிரதேசத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னர் அந்த பதவியிலிருந்த கார்டினல் பெர்னாண்டோ வெர்கெஸ் மார்ச் முதலாம் திகதி ஓய்வு பெறவுள்ள நிலையில், அந்த பதவியை ரபேலா பெட்ரினி ஏற்கவுள்ளார். இவர் இதற்கு முன்பு வாடிகன் நிர்வாகத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டார் ஓபன் ரென்னிஸில் சம்பியனானார் அமண்டா

டோஹா, பெப்.17

கட்டார் ஓபன் ரென்னிஸ் தொடரில் அமெரிக்க வீராங்கனை அமண்டா அனிசிமோவா சம்பியனானார்.

இந்தத் தொடர் டோஹாவில் உள்ள கலீபாவில் நடைபெற்று வந்தது. இதில், நேற்று முன்தினம் நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் அமண்டா அனிசிமோவா, லாத்வியாவின் ஜெலினா ஆஸ்டாபெண்கோவுடன் மோதினார்.

இந்தப் போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அமண்டா அனிசிமோவா 6 - 4, 6 - 3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார்.(எ)



## ஜன்னிக் சின்னெருக்கு மூன்று மாதங்கள் தடை



லண்டன், பெப்.17

ஊக்கமருந்து பாவித்த சர்ச்சையில் சிக்கிய இத்தாலியின் ஜன்னிக் சின்னெருக்கு 3 மாதங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

உலகின் "நம்பர் 1" ரென்னிஸ் வீரராக வலம் வரும் ஜன்னிக் சின்னெர் இதுவரை 3 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். கடந்த மாதம் மெல்பேர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபனில் சம்பியனானார். 23 வயதான சின்னெர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் ஊக்கமருந்து பாவித்த சர்ச்சையில் சிக்கினார்.

அவரிடம் சேகரிக்கப்பட்ட சிறுநீர் மற்றும் இரத்த மாதிரியை பரிசோதித்த போது அதில் குளோஸ்ட்போல் என்ற தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து லேசாக இருப்பது கண்டறியப்பட்டது. 8 நாளுக்கு பிறகு மீண்டும் நடந்த சோதனையிலும் இது உறுதி செய்யப்பட்டதால் அவருக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து ஜன்னிக் சின்னெர் மேன்முறையீடு செய்த நிலையில் போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்க ரென்னிஸ் சங்கம் அனுமதி வழங்கியது.

இந்த நிலையில் உலக ஊக்கமருந்து தடுப்பு பிரிவு சுவிட்சர்லாந்தில் உள்ள சர்வதேச விளையாட்டு நடுவர் மன்றத்தில் முறைப்பாடு செய்து, ஜன்னிக் சின்னெருக்கு குறைந்தது ஓராண்டாவது தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

இதன் தொடர்ச்சியாக ஜன்னிக் சின்னெர் ஊக்கமருந்து சோதனையில் தோல்வி கண்டால் அவருக்கு 3 மாதங்கள் தடைவிதிக்க வேண்டும் என்று ஊக்கமருந்து தடுப்பு பிரிவு பரிந்துரைத்தது. அதனை ஜன்னிக் சின்னெரும் நேற்று முன்தினம் ஏற்றுக்கொண்டார். இதன் மூலம் 11 மாதங்களாக நீடித்த இந்த விவகாரம் முடிவுக்கு வந்துள்ளது. (எ)

### ஆஸிக்கு பதிலடி

## ஒருநாள் தொடர் இலங்கை வசம்

கொழும்பு, பெப்17

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டியில் இலங்கை வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து 2ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை 50 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து 281 ஓட்டங்கள் அடித்தது. அதிகபட்சமாக குசல் மெண்டிஸ் 101 ஓட்டங்கள் அடித்தார்.

இதனையடுத்து 282 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அவுஸ்திரேலியா, இலங்கையின் அபார பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தது. வெறும் 24. 2 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்த அவுஸ்திரேலியா 107 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதனால் 174 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இலங்கை அணி ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது.

இலங்கை தரப்பில் துனித் வெல்லாலகே 4 விக்கெட்களும், அசித பெர்னாண்டோ மற்றும் வனிந்து ஹசரங்கா ஆகியோர் தலா 3 விக்கெட்களும் கைப்பற்றி அசத்தினர். முன்னதாக நடைபெற்ற 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய அணி முழுமையாக கைப்பற்றியிருந்தது. (எ)




## முதல் போட்டியில் சிம்பாவே வெற்றி



ஹராரே, பெப்.17

அயர்லாந்துக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவே அணி வெற்றி பெற்றது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் ஒருநாள் போட்டி ஹராரேவில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்களை இழந்து 299 ஓட்டங்கள் குவித்தது. பிரையன் பென்னட் 169 ஓட்டங்களும், கிரெய்க் எர்வின் 66 ஓட்டங்களும் அடித்தனர்.

பின்னர் 300 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய அயர்லாந்து அணி 46 ஓவர்களில் 250 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவே வெற்றி பெற்றது. (எ)

## இறுதி பந்தில் டில்லி வெற்றி



வதோதரா, பெப்.17

மிகவும் பரபரப்பான போட்டியில் 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் டில்லி அணி வெற்றி பெற்றது.

இந்திய மகளிர் பிரீமியர் லீக் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில், வதோதராவில் நடைபெற்ற போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி, சகல விக்கெட்களையும் இழந்து 19. 1 ஓவர்களில் 164 ஓட்டங்கள் சேர்த்தது. ஸ்கைவர்-பிரண்ட் 80 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். டில்லி தரப்பில் அன்னாபெல் சதர்லேண்ட் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 165 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய டில்லி அணி, 20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழந்து, 2 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

## இலங்கை அணிக்கு ஸ்டீவ் ஸ்மித் பாராட்டு

கொழும்பு, பெப்.17

ஒருநாள் தொடரில் இலங்கை அணி சிறப்பாக செயல்பட்டது என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் தெரிவித்தார். இலங்கை - அவுஸ்திரேலியா இடையிலான ஒருநாள் போட்டி தொடரை இலங்கை அணி முழுமையாக கைப் பற்றியது.

இந்த நிலையில், படுதோல்வியடைந்த அவுஸ்திரேலிய அணியின் தலைவர் ஸ்டீவ் ஸ்மித் கூறுகையில், "கடந்த இரண்டு ஆட்டங்களிலும் நாங்கள் மோசமாக விளையாடியுள்ளோம். இங்கு நிறைய வீரர்களைப் பயன்படுத்தியுள்ளோம். நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருகிறோம். ஆனால், இந்தத் தொடரில் இலங்கை அணி சிறப்பாக செயல்பட்டுள்ளது. அவர்களின் பந்து வீச்சாளர்கள் எங்கள் துடுப்பாட்ட வீரர்களை தொடர்ந்து அழுத்தத்தில் வைத்ததுடன் சிறப்பாக விளையாடினர். மேலும், அவர்களின் பந்துவீச்சானது இந்த மைதானத்தில் எங்களின் வாய்ப்பை மேலும் கடினமாக்கியது. இந்த சுற்றுப் பயணத்தில் சில சிறந்த நினைவுகளை நாங்கள் பெற்றுள்ளோம்"- என்றார். (எ)

## முத்தரப்பு தொடரில் நியூசிலாந்து சம்பியன்




கராச்சி, பெப்.17

முத்தரப்பு தொடரின் இறுதிப்போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி சம்பியனாகி அசத்தியது.

பாகிஸ்தான், நியூசிலாந்து, தென்னாபிரிக்கா இடையிலான ஒருநாள் கிரிக்கெட் தொடர் பாகிஸ்தானில் நடைபெற்றது. இந்தத் தொடரின் லீக் சுற்று முடிவில் நியூசிலாந்து (4 புள்ளி), பாகிஸ்தான் (2 புள்ளி) அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. தென்னாபிரிக்கா(2 ஆட்டத்திலும் தோல்வி) வெளியேறியது.

இதனையடுத்து கராச்சி தேசிய மைதானத்தில் கடந்த 14 ஆம் திகதி நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதின. இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 49. 3 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 242 ஓட்டங்கள் எடுத்தது. நியூசிலாந்து தரப்பில் வில்லியம் ஓ ரூர்க் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 243 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய நியூசிலாந்து 45. 2 ஓவர்களில் 5 விக்கெட்கள் மட்டும் இழந்து 243 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று சம்பியனானது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம்...

இணைப்பை ஏற்படுத்த முயன்றுள்ளார். அப்போது அவர் மின்சாரத்தால் தாக்குண்டு விழுந்து கிடந்துள்ளார்.

வீட்டுக்கு வந்த உறவினர்கள் நிலைமையை அவதானித்து அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். எனினும், அவர் வழியிலேயே உயிரிழந்து விட்டார் என்று அவரை பரிசோதித்த மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சிறுவனின் சடலம் உடல் கூறாய்வுக்காக யாழ். போதனா மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-05)

## தீயில்...

என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

நீர்வேலியை சேர்ந்த குறித்த பெண் கடந்த 8ஆம் திகதி இரவு நுளம்புத்திரியை ஏற்றிய பின்னர் தீக்குச்சியை கீழே போட்டுள்ளார். அது, அங்கிருந்த மண்ணெண்ணெய் கலனில் பட்டதால் தீ பரவி காயமடைந்ததாக அவர் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 நாட்களாக தாயையும் சிசுவையும் காப்பாற்ற மருத்துவர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டனர். எனினும், சிகிச்சை பலனளிக்காமல் சிசுவுடன் பெண் உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05-02)

## உள்ளூராட்சி...

மாவை. சேனாதிராஜாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பல விடயங்கள் ஆராயப்பட்டன. எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் என்று கருதப்படும் உள்ளூராட்சி தேர்தலில் கட்சி முன்னர் தீர்மானித்தது போன்று தனித்தே போட்டியிடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனினும், தமிழர் பிரதிநிதித்துவம் பறிபோகும் என்று கருதப்படும் சபைகளில் மாத்திரம் கூட்டாகப் போட்டியிடுவது என்றும் இது தொடர்பில் முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகளுடன் பேசுவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேபோன்று, உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்பாளர்களை தெரிவு செய்வது தொடர்பில் பதில் தலைவரும் பதில் பொதுச் செயலாளரும் தீர்மானித்து செயல்படுவது என்றும் இணக்கம் காணப்பட்டது.

இதேநேரம், புதிய ஒற்றையாட்சி அரசமைப்புக்கு எதிராக ஒன்றிணைந்து செயல்பட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதில் தலைவருக்கு எழுதிய கடிதம் கூட்டத்தில் வாசித்துக் காட்டப்பட்டது. இது தொடர்பாக ஆராய அமைக்கப்பட்ட 7 பேர் குழுவிலிருந்து சாணக்கியன் எம். பி. விலகினார். அவர், தனது இடத்துக்கு சிறீநேசன் எம். பியை நியமிக்குமாறு சிபாரிசு செய்தார்.

மேலும், புதிய அரசமைப்பு தொடர்பான விடயங்களை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டும் என்று ஊடகங்களுக்கு தகவல் வெளியிட்ட சுமந்திரன் வலியுறுத்தினார்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஒழுக்காற்று குழுவும் மாற்றியமைக்கப்பட்டதுடன், அதன் தலைவராக த. குருகுலராஜா நியமிக்கப்பட்டார்.

இதேபோன்று, கட்சியின் மறைந்த முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவின் உடலத்துக்கு கட்சிக் கொடி போர்த்தப்பட்ட விவகாரம் தொடர்பிலும் பேசப்பட்டது. கட்சியிலிருந்து இடைநிறுத்தப்பட்டவர் (பா.அரியநேத்திரன்) எவ்வாறு கட்சி கொடியை போர்த்த முடியும் என்றும் இது தொடர்பில் விசாரிக்கவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

## பிரதமரை...

போதிலும் பிரதமரை சந்திப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாக காணி உரிமையாளர்களில் ஒருவரான இந்தி ராணி தெரிவித்தார்.

மேலும், இந்த அரசியல்வாதிகளை நம்பாது தொடர்ந்தும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## தமிழர்...

வனவிலங்குகள் சரணாலயங்கள், வனப்பகுதி ஒதுக்கங்கள், காணி மற்றும் விவசாய அபிவிருத்தி திட்டங்கள், மகாவலி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் விசேட பொருளாதார வலயங்கள் என்ற போர்வையில் தமிழர் பாரம்பரிய நிலத்தைத் திட்டமிட்டு அழிக்கும் உத்திகள் இடம்பெறுகின்றன.

சட்டங்கள் மற்றும் அதிகாரங்கள் மூலமும் ஆயுத படையினரின் ஆக்கிரமிப்புகள் மூலமும் ஏனைய சமூகங்களின் திட்டமிட்ட குடித் தொகை வளர்ச்சியும் தமிழர் தாயகத்தின் குடித்தொகைப் பரம்பலில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்தி விட்டது.

எனினும், வடக்கில் தையிட்டி, வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை போன்ற இடங்களிலும் கிழக்கிலே மயிலத்தனையிலும் தொடர்ச்சியாக போராடி வரும் தமிழ் மக்கள் நில ஆக்கிரமிப்மை அடையாளபூர்வமாக வெளிக்கொண்டு வருவது மிக முக்கிய மான விடயமாகும். உயிர்ப்புடன் இருக் கும் பாரதூரமான பாதிப்புகளை மக்கள் திரள் போராட்ட வடிவத்தில் தொடர வேண்டும்.

இருப்பினும், இந்தப் போராட்டங்கள் இலங்கை தீவுக்குள் மட்டுமே அடங்கி விடுமாயின், அரசுக்கு எதிராக காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது போய்விடும். ஈழத் தமிழர்கள் இலங்கையில் மட்டுமே போராடி நாம் எதிர்பார்க்கும் சாதகமான முடிவுகளை அடைந்து விட முடியாது என்ற யதார்த்தம் கசப்பானது.


இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நில ஆக்கிரமிப்புகளை ஆதாரத்துடன் ஒன்று திரட்டி, தொகுத்து, இலங்கைக்குள் மட்டுமே நின்று விடாது, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையம் போன்ற முக்கியமான அமைப்புகளின் மூலம் உலக அரங்கில் அம்பலப்படுத்தும் வகையிலான சமாந்தரமான நடவடிக்கைகளை அரசியல் வாதிகளும் சிவில் சமூக கட்டமைப்புகளும் மேலும் காத்திரமாக முன்னெடுக்கவேண்டும்.

நில ஆக்கிரமிப்பு குறித்த பல்வேறு ஆவணங்களை பிரித்தானியா தமிழர் பேரவையானது ஆய்வு செய்து வெளியிட்டு வருவதுடன் அரசாங்கத்தின் நில அபகரிப்பு தொடர்பான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையில் தொடர்ச்சியாக முன் வைத்து அங்கத்துவ நாடுகளின் அழுத்தங்களை ஏற்படுத்த வாதாடி வருகின்றது. மாறாக சர்வதேச சக்திகளின் தலையீடுகளை இலங்கை அரசு முற்றாக வெறுத்து ஒதுக்க முற்படுகின்றது.

அன்று போரால் ஈழத்தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்த காரணிகளை மாற்றியமைக்காமல் கபடத்தனமாக அதனை வெவ்வேறு வழிகளில் தொடர்ந்து வருகின்றது. வடக்கு, கிழக்கிலே மக்கள் மீள குடியேறி வாழ உகந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தாமல் அங்கே வாழும் தமிழ் மக்களை தம் பூர்வீக பூமியிலிருந்து வெளியேற்றும் சூழ்நிலைகளை உருவாக்கி வருகின்றது.

இதன் மூலம் தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இன விகிதாசாரத்தைக் குறைக்கும் நோக்கில் சிங்கள அரசு செயல்பட்டு வருவதை பிரித்தானியா தமிழர் பேரவையானது வன்மையாகக் கண்டிக்கிறது. அத்துடன் உலகின் சக்தி வாய்ந்த முடிவெடுக்கும் மையங்களை தமிழ் மக்கள் நேரடியாக அணுகி தமது சட்டபூர்வமான அதிகாரங்களை நிலை நாட்ட செயல்திறனுடன் ஒருங்கிணைந்து போராட வேண்டும் என வேண்டி கொள்கின்றது - என்றுள்ளது. (ஐ)

# மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது



தென்மராட்சி, பெப். 17

பாரவூர்தியில் சூட்சுமமான முறையில் கடத்திச் சென்ற மரக்குற்றிகளை கைப்பற்றிய பொலிஸார், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து எழுதுமட்டுவாழ் சோதனைச் சாவடியில் கடமையிலிருந்த பொலிஸாரின் உதவியுடன் இந்த மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான மரக்குற்றிகளே இவ்வாறு கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## அரச...

அந்த அரச நிறுவனங்களை இலாப மீட்டும் நிறுவனங்களாக மாற்றியமைக்க நடவடிக்கைகளை எடுப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஐ. எம். எவ். இதற்கு சாதகமான பதிலை அளித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. எனினும், இன்றைய தினம் பாராளுமன்றத்தில் வரவு - செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஒப்பந்தத்தின் முன்னேற்றங்கள் குறித்து இரு தரப்பு பேச்சுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வரவு - செலவு திட்டமானது மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் வகையில் முன்வைக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. மறுபுறம் இந்த வரவு - செலவு திட்டமானது சர்வதேச நாணய நிதியத்தின் இலக்குகளை பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும் என நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டு நவம்பர் 23 ஆம் திகதி இலங்கையில், சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் மூன்றாவது மதிப்பாய்வு குறித்து பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

இதன் பிரகாரம் நாணய நிதியத்தின் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சுமார் 33 கோடி அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கும். எவ்வாறாயினும் இந்த நிதியுதவியை வழங்குவதற்கான கலந்துரையாடல்கள் வரும் நாட்களில் நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீன அமைச்சர்...

மாவட்டத்துக்கும் இந்தக் குழு வருகை தரவுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சீன ஆதரவுடனான திட்டங்கள் அண்மைக் காலமாக அதிகளவில் நடைபெறுகின்றன. அத்துடன், சீன பிரமுகர்கள் வடக்கு, கிழக்குக்கு வருகை தரும் சந்தர்ப்பங்களும் அதிகரித்துள்ளன. எனினும், சீனாவின் உயர் அமைச்சர் ஒருவர் வடக்குக்கு உத்தியோகபூர்வமாக வருகை தருவது அண்மைக்காலத்தில் இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ள அமைச்சர் பான் யூ, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கின் அமைச்சரவையில் முக்கிய உறுப்பினராவார். அத்துடன், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமாவார்.

பான் யூ இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் இன நல்லிணக்கம் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாட்டில்...

அதிகளவான சிறுநீரக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்த சிறுநீரக சிகிச்சை நிலையங்களை அரசு அமைக்க வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளையும் வழங்க வேண்டும் என்றும் அந்தத் தொழிற்சங்கம் வலியுறுத்தியுள்ளது. (ஐ)

## இலங்கை...

பொதுச் செயலாளராக முன்மொழியப்பட்டார்.

இந்த முன்மொழிவுக்கு சி. சிறீதரன், ஞா. சிறீநேசன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர். எனினும், மத்திய குழுவின் பெரும் பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் சுமந்திரன் பதில் பொதுச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட் டார். (ஐ)

## ஆசிய...

டொலர்கள் விவசாயம், மின்சாரம், சுற்றுலா, திறன் மேம்பாடு மற்றும் பேரின பொருளாதார ஸ்திரத்தன்மை போன்ற துறைகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கை மீண்டு வருவதனால் முன்னுரிமை அடிப்படையில் தமது ஆதரவை வழங்குவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகாஃபுமி கடோனோ தெரிவித்துள்ளார். (ஐ)

## அநுர...

மீதான வாக்கெடுப்பு 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6:00 மணிக்கு நடைபெறும்.

ஒதுக்கீட்டு மசோதா மீதான குழு நிலை விவாதம் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் மார்ச் 21 வரை நான்கு சனிக்கிழமைகள் உட்பட 19 நாட்களுக்கு நடைபெறும்.

மசோதாவின் மூன்றாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

வரவு - செலவுத் திட்ட விவாத காலத்தில், வாய்மொழி பதில்களுக்கான ஐந்து கேள்விகளுக்கு காலை 9.30 மணி முதல் காலை 10.00 மணி வரை நேரம் ஒதுக்கப்படும்.

இதே நேரத்தில், விவாதம் காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை நடைபெறும்.

கூடுதலாக, வாக்குப்பதிவு நடைபெறும் செவ்வாய்க்கிழமை மற்றும் மார்ச் 21 தவிர, அனைத்து நாட்களிலும் மாலை 6.00 மணி முதல் மாலை 6.30 மணி வரை ஒத்திவைப்பு நேர பிரேரணைகள் நடைபெறும். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# விவசாய ஏற்றுமதியால் ரூ. 8,921 கோடி வருமானம்!

## ஏற்றுமதி அபிவிருத்தி நிலையம்

கொழும்பு, பெப்.17

**கடந்த ஆண்டு 44 ஆயிரத்து 262 மெற்றிக் தொன் விவசாய உற்பத்தி பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இதன்மூலம், 8 ஆயிரத்து 921.7 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டதாக ஏற்றுமதி அபிவிருத்தி பணிப்பாளர் உபுல் ரணவீர தெரிவித்துள்ளார்.**

கண்டியில் அமைந்துள்ள ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் அதிகளவான வருமானம் மிளகு ஏற்றுமதி மூலம் கிடைத்தது. 25 ஆயிரத்து 968 மெற்றிக் தொன் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மூலம் 51 ஆயிரத்து 524 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைத்தது. இது இதுவரை கிடைத்த வருமானத்திலும் பார்க்க அதிகமாகும்.

அத்துடன், 8 ஆயிரத்து 852 மெற்றிக் தொன் பாக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, 11 ஆயிரத்து 598 மில்லியன் ரூபாய் வருமானமும், 2 ஆயிரத்து 317 மெற்றிக் தொன் சாதிக்காய் ஏற்றுமதி செய்யப்பட்டு, 4 ஆயிரத்து 648 மில்லியன் ரூபாய் வருமானமும், மஞ்சள், இஞ்சி, கோப்பி, ஏலக்காய், கிராம்பு, வனிலா, வெற்றிலை ஏற்றுமதி மூலமாக 20 ஆயிரத்து 526 மில்லியன் ரூபாய் கிடைத்துள்ளது - என்றார். (ஐ)

# தவறுதலாக கல்சிய தண்ணீரை அருந்திய முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 17

யாழ்ப்பாணத்தில் கல்சியம் கலந்த தண்ணீரை தவறுதலாக அருந்திய முதியவர் உயிரிழந்தார்.

திருநெல்வேலி, கலாசாலை வீதியை சேர்ந்த ராசன் மைக்கல் (வயது 85) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, உயிரிழந்த முதியவர் கடந்த வெள்ளிக்கிழமை வறுதலாக கல்சியம் கலந்த தண்ணீரை அருந்தியுள்ளார். இந்நிலையில் சிகிச்சை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன் தினம் உயிரிழந்தார். அவரின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஐ-05)

# வட, கிழக்கு கல்வி பணிப்பாளர் பதவிகளுக்கு வெற்றிடங்கள்!

கொழும்பு, பெப். 17

வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களின் கல்வி பணிப்பாளர் பதவிகள் வெற்றிடமாகவுள்ளன என்று கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1 இல் 5 வருடங்களுக்குக் குறையாத திருப்திகரமான சேவை காலத்தைக் கொண்ட மற்றும் அனைத்து தகைமைகளையும் கொண்ட நபர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் மார்ச் 3 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# பிரபாகரனின் படத்தை பயன்படுத்த சீமானுக்கு தடை விதிக்க வேண்டும்!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு

சென்னை, பெப். 17

தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரனின் படத்தை பொது வெளியில் பயன்படுத்த சீமானுக்கு தடை விதிக்க வேண்டும் என்று கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சென்னையை சேர்ந்த எல். கே. சார்ள்ஸ் அலெக்சாண்டர் என்பவர் தாக்கல் செய்துள்ள மனுவில்,

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளராக சீமான் கடந்த 2010ஆம் ஆண்டு முதல் பதவி வகித்து வருகிறார். கடந்த 2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசுக்கு இடையிலான சண்டையின் போது விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரான பிரபாகரனை சீமான் போர் முனையில் சந்தித்து பேசினார் என்றும் துப்பாக்கியால் போர் பயிற்சி எடுத்தார் எனவும் சீமான் தமிழகத்தில் பரப்புரை மேற்கொண்டு வருகிறார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழகத்தில் படுகொலை செய்யப்பட்டபிறகு விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் தமிழகத்தில் இலங்கை போர் தொடர்பான மார்பிங் செய்யப்பட்ட புகைப் படங்களை கொண்டு சீமான் வன்முறையைத் தூண்டும் வகையில் செயல்பட்டு வருகிறார். குறிப்பாக தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவரான பிரபாகரனின் படத்தை தனது அரசியல் ஆதாயங்களுக்காக தேர்தல் பிரசாரங்களில் பயன்படுத்தி வருகிறார்.

அவர் மார்பிங் செய்யப்பட்ட படங்களை பொது வெளியில் பயன்படுத்தி வருவதாக சங்ககிரி ராஜ்குமார் உள்ளிட்டோர் குற்றம் சாட்டியுள்ளனர். கள்ளக்குறிச்சி தேர்தல் பிரசாரத்தின்போது ராஜீவ் காந்தியை நாங்கள்தான் கொலை செய்தோம் என சீமான் பகிரங்கமாக பேசியுள்ளார். எனவே தடை செய்யப்பட்ட பிரபாகரன் படத்தை பொது வெளியில் பயன்படுத்த சீமானுக்கு தடை விதிக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# கடவுச்சீட்டுகளை ஒப்படைக்குமாறு இராணுவத்தினருக்கு பணிப்புரை!



கொழும்பு, பெப். 17

இராணுவத்தில் மேஜர் தரநிலைக்கு கீழுள்ள அனைத்து படையினரும் தங்கள் கடவுச்சீட்டுகளை அந்தந்த படைப்பிரிவுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பயிற்சி மற்றும் உத்தியோகபூர்வ விடயங்களுக்காக கடவுச்சீட்டு பெறுவதில் ஏற்பட்டுள்ள தாமதங்களை நிவர்த்தி செய்யும் நோக்கில் நிர்வாக நோக்கங்களுக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் வருண கமகே தெரிவித்துள்ளார். (ஐ)

# மக்களின் துன்பங்களை உணர்ந்து நடவடிக்கை எடுக்கும் அரசே தேவை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 17

சாதாரண மக்கள்படும் துன்பங்களை உணர்ந்து நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் நாட்டுக்கு தேவை என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

விஜய குமாரணதுங்கவின் 37ஆவது நினைவு தினத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், விஜய குமாரணதுங்கவின் வாழ்வில் அவர் உருவாக்கிய பார்வை, கடைப்பிடித்த நடைமுறைகள் என்பன குறிப்பாக வீழ்ச்சியடைந்த மற்றும் வங்குரோத் தடைந்துள்ள எமது நாட்டை கட்டியெழுப்பும் நடவடிக்கையில் முக்கியத்துவம் கொடுத்து நோக்க வேண்டிய அம்சங்களாகும்.

விஜய குமாரணதுங்கவிடம் காணப்பட்ட பல உன்னத குணங்கள் இன்றைய காலகட்டத்துக்கு முக்கிய மானவையாகும்.

கொள்கைகளுக்கு துரோகம் செய்யாத, அதிகாரத்துக்காக எதையும் தியாகம் செய்யும், நாட்டு மக்களுக்கு எவ்வாறானாலும் தனக்கு பதவிகள் கிடைத்தால் போதும் என்று கூறும் சீரழிந்து போன அரசியல் கலாசாரத்தை விஜய குமாரணதுங்க அன்றே எதிர்த்தார்.

சாதாரண மக்கள் படும் துன்பங்களை தயக்கமின்றி உணரும் அதனை கருத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் நாட்டுக்கு தேவை - என்றார். (ஐ)

# காய்ச்சலால் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், பெப். 17

காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

தென்மராட்சி - மிருசுவிலை சேர்ந்த நடராசலிங்கம் புஸ்பராணி (வயது 67) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த 08ஆம் திகதி முதல் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார். கடந்த 11ஆம் திகதி சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம் குமார் மேற்கொண்டார். (ஐ-05)

# ரி-56 ரக துப்பாக்கியுடன் கடற்படை சிப்பாய் கைது

கொழும்பு, பெப். 17

ரி - 56 ரக துப்பாக்கியுடன் கடற்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். நேற்று ஞாயிற்றுக்கிழமை குருநாகல் - குளியாப்பிட்டியில் வைத்துக் குறித்த சிப்பாய் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து மீட்கப்பட்ட துப்பாக்கி 2021ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகம், ரங்கல முகாமின் அரச ஆயுதக் களஞ்சியசாலையில் இருந்து காணாமல் போனது என்று தெரிவிக்கப்பட்டது. கைதான சிப்பாய் அந்தச்சமயத்தில் குறித்த ஆயுத களஞ்சியசாலைக்கு பொறுப்பாக இருந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

குறித்த துப்பாக்கியை சிப்பாய் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த நிலையிலேயே பொலிஸார் அதனைக் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

# ஐ. தே. க. - ஐ. ம. ச. இணைப்பு குழுவிலிருந்து திஸ்ஸ விலகல்

கொழும்பு, பெப். 17

ஐக்கிய தேசிய கட்சியையும் ஐக்கிய மக்கள் சக்தியையும் இணைப்பது தொடர்பில் சஜித் நியமித்த பேச்சு குழுவிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க விலகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் மீண்டும் இணைந்து செயல்படுவது தொடர்பில் பேச்சுகள் நடைபெற்று வந்தன. இந்தப் பேச்சுகளை மேலும் வலுவாக்கும் வகையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலிருந்தே திஸ்ஸ அத்தநாயக்க விலகியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து போட்டியிடுவது தொடர்பாக இந்தப் பேச்சுக் குழு கவனம் செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org